திருவள்ளுவர் ஆண்டு 2040

டிசம்பர் - 09

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி : 53
பகுதி : 2

விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# பாண்டித்துரைத் தேவர் நினைவு நாள்



2009-டிசம்பர் 2 அன்று பாண்டித்துரைத் தேவர் நினைவு நாளை ஒட்டி இரங்கல் கூட்டம் நடைபெற்றது. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்ஃபில். அவர்கள் தலைமை தாங்கினார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் திருமிகு. இரா. குருசாமி பி.ஏ., அவர்கள் முன்னிலை வகித்தார். செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் முனைவர். க. சின்னப்பா அவர்கள் பாண்டித்துரைத் தேவர் அவர்களுடைய நினைவுகளைக் கூறி சிறப்புரை ஆற்றினார். மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்களும், மத்திய அரசு வழக்கறிஞர் சு. வீரணசாமி அவர்களும், மதுரை உயர்நீதிமன்றக் கிளை வழக்கறிஞர் க. முத்தையா பசும்பொன் அவர்களும் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர். ஆசிரியப் பெருமக்களும், அலுவலர்களும், மாணவ மாணவியர்களும் மதுரைத் தமிழ்ச்சங்கத்திலிருந்து ஊர்வலமாகச் சென்று மதுரை மில் மேம்பாலத்தில் அமைந்து இருக்கும் பாண்டித்துரைத் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினர். அந்நியர் ஆட்சியில் முதன்முதலில் தமிழுக்காகச் சங்கம் அமைத்த பெருமை பாண்டித்துரைத் தேவர் அவர்களையே சாரும் என்பது நினைவு கூரத்தக்கது.

# செந்தமிழ்

(தோற்றம் 1902)


தொகுதி : 52 திங்கள் இதழ்

பகுதி : 14 திருவள்ளுவர் ஆண்டு 2040

டிசம்பர் 2009




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

சாஸ்திரியாரின் சொல்லதிகார அணுகுமுறையும் உருபனியல் கோட்பாடும் — 4

முனைவர் வீ. ரேணுகாதேவி

தஞ்சை மன்னர் இரண்டாம் சரபோஜியின் புனிதப்பயணம் – ஒரு வரலாற்று ஆய்வு — 11

முனைவர் பு. வேம்பரசி

தானழிதல், தமிழகப் பண்பாட்டின் தொல்லெச்சம் — 18

முனைவர் பட்டாபிராமன்

சிலேடைகள் — 22

முனைவர் க. பரமேஸ்வரன்

கலைக்களஞ்சியத்தின் தேவையும் அதன் பன்முகப்பட்ட வரலாறும் — 26

முனைவர் சிவ. மூத்தன்

குற்றுயிர் மடக்கு — 38

திரு. ஆறுவிரல் ஐம்பொறி

# இதழ் மணம்

தமிழ்நேயர்களுக்கு வணக்கம்.

இம்மாத இதழில் முனைவர். வீ. ரேணுகா தேவி தொன்மையான தமிழ்மொழிஇலக்கணம், மொழியியல் கொள்கையுடன் அமைந்துள்ள திறத்தை நுட்பமாக ஆய்ந்து சிறப்புடன் வெளிப்படுத்தியுள்ளார்.

தஞ்சை மன்னர் இரண்டாம் சரபோஜியின் சமயப் பயணம் ஆன்மிகம் தொடர்பாக மட்டும் அமையாமல், நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கிய தன்மையை முனைவர் பு. வேம்பரசி தம் கட்டுரையில் சிறப்பாக வெளிக்காட்டியுள்ளார்.

நாட்டிற்காக இன்னுயிர் வழங்குதல் தமிழர்களின் பண்பாடு என்பதைத் தானழிதல், தமிழகப் பண்பாட்டின் 'தொல்லெச்சம்' என்ற கட்டுரை சிறப்பாக வெளிக்காட்டியுள்ளது.

முனைவர் சு. பரமேஸ்வரனின் 'சிலேடைகள்' என்னும் கட்டுரை நம் மொழியின் வளத்தைக் காட்டியுள்ளமை சிறப்புடையதாகும்.

தொடர்ந்து வரும் தலைமுறையினருக்கு மனித இனத்தின் மொழி, கலை, மருத்துவம், அறிவியல் தொடர்பான தகவல்கள் அறிவதற்குக் 'கலைக் களஞ்சியங்கள் தேவை' என்பதை முனைவர் கூ. முத்தன் தன் கட்டுரையில் சிறப்பாக வெளிக்காட்டியுள்ளார்.

நம் தமிழ்ச் சங்கச் செம்மல், பெரும்புலவர் தினமணிக்கதிர் பேட்டிச் செய்தி '4000 தமிழ்த் திருமணங்கள்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.

அதுபோலவே, நம் இந்தியப் பிரதமரின் சுதந்திர தின நாள் உரையின் சில பகுதிகள் நம் இதழில் இடம்பெற்று, தேச வளர்ச்சியை நினைவு கூர்ந்ததற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

முனைவர் க. சின்னப்பா

# சாஸ்திரியாரின் சொல்லதிகார அணுகுமுறையும் உருபனியல் கோட்பாடும்

முனைவர் வீ. ரேணுகா தேவி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

வடமொழி, தென்மொழி இலக்கணங்களில் சிறந்து விளங்கியவரும், ஆங்கில மொழியை நன்கு கற்றறிந்தவருமான பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரியார் தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் இரண்டிற்கும் உரையாசிரியர்கள் எழுதிய உரையை ஆய்ந்து அவற்றிலிருந்து எந்த நூற்பாவிற்கு எந்த உரையாசிரியரின் உரை ஏற்புடையதாக அமைகின்றது என்பதை விளக்கிக் கூறுகிறார். அவ்வாறு விளக்க முற்படும் போது, 19–ஆம் நூற்றாண்டிலே கால்கோள் கொள்ள ஆரம்பித்த மொழியியல் கோட்பாடுகளும் வெளிப்படுகின்றன. இஃது அவருடைய மொழியியல் அறிவினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

சாஸ்திரியார் 1945ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட தொல்காப்பியம் – சொல்லதிகாரம் என்ற நூலை முதன்மைத் தரவாகவும், 1930 ஆம் ஆண்டு தமிழில் எழுதி வெளியிட்ட தொல்காப்பியம் – சொல்லதிகாரக் குறிப்பு, 1936 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மொழி நூல் ஆகிய இரண்டையும் துணைத்தரவுகளாகவும் கொண்டு சாஸ்திரியாரின் **சொல்லதிகார அணுகுமுறையும், உருபனியல் கோட்பாடுகளும்** என்னும் இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

தொல்காப்பியர் எழுத்து, சொல், பொருள் என மூன்று நிலையில் மொழிக்கு இலக்கணம் கூறியுள்ளார். மொழியியலார் புற அமைப்பு (Pheriperal system), அக அமைப்பு (central system) என மொழி இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது என்றும், புற அமைப்பு ஒலியியல் (Phonetics), பொருண்மையியல் (semantics), என இரு உட்பிரிவுகளையும், அக அமைப்பு, ஒலியனியல் (phonetics), இலக்கணம் (Grammar), உருபொலியனியல் (Morphophonemics)

என்னும் மூன்று உட்பிரிவுகளைக் கொண்டது எனவும் விவரிப்பார். இலக்கணம் என்பது உருபனியலையும் (Morphology), தொடரியலையும் (syntax) உள்ளடக்கியது ஆகும்.

தொல்காப்பியம் , மொழியியல் நோக்கில் கூறப்பட்டுள்ள செய்திகள் அனைத்தையும் மூன்று அதிகாரங்களில் முழுமையாக விளக்க முற்படுகின்றது. இங்கு சொல்லதிகாரக் குறிப்புகளில் காணப்படும் சொல்வகை பற்றிய செய்திகள் மட்டுமே விவரித்துக் கூறப்படுகின்றன.

சொல்லதிகாரம், (1) கிளவியாக்கம் (2) வேற்றுமையியல் (3) வேற்றுமைமயங்கியல் (4) விளிமரபு (5) பெயரியல் (6) வினையியல் (7) இடையியல் (8) உரியியல் (9) எச்சவியல் என ஒன்பது இயல்களைக் கொண்டது. அவற்றுள் முதல் நான்கு இயல்கள் தொடரியல் பற்றியும், எஞ்சிய ஐந்து இயல்கள் உருபனியல் (Morphology) பற்றியும் விளக்குகின்றது என்பதை சாஸ்திரியார் தன் சொல்லதிகார முன்னுரையில் (1945: vi ) குறிப்பிடுகிறார்.

சொல்லதிகாரம் முதல் நான்கு இயல்களில் சொற்களின் வருகை (External distribution of words) பற்றியும் அடுத்த ஐந்து இயல்களில் சொற்களின் கட்டமைப்பு (Internal structure of the word) பற்றியும் விளக்குகின்றது என்பதைக் காணும் பொழுது பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியம் உருபனியல், தொடரியல் கோட்பாடுகளை விளக்கியுள்ளது என்பதை சாஸ்திரியாரின் உரை வழி அறியலாம். உருபனியல் எங்கு முடிந்து தொடரியல் எங்கு தொடங்குகின்றது என்பதை அறுதியிட்டு கூற இயலாது. இக்கூற்றினை யுஜின் நைடாவும் Morphology and Syntax are not water tight compartments என்று கூறுகிறார். சொற்களின் அமைப்பு (morphology), சொற்களின் வருகை (syntax) இரண்டையும் சொல்லதிகாரத்தில் விளக்க முற்பட்டுள்ளார் தொல்காப்பியர்.

எழுவாய்க்கும் பயனிலைக்கும் உரிய இயைபு (concor) பற்றி கிளவியாக்கத்திலும், பெயருக்கும் வினைக்கும் உள்ள தொடர்பு பற்றி வேற்றுமையியலிலும்; உருபு மயக்கம் (contamination) பற்றி வேற்றுமைமயங்கியலிலும், எழுவாய் வேற்றுமைபற்றி விளி

மரபியலினும், பெயர் பற்றிய செய்திகள் பெயரியலிலும், வினை பற்றிய செய்திகள் வினையியலிலும், உரிச்சொற்கள் அல்லது வேர்ச்சொற்கள் பற்றிய செய்திகள் உரியியலிலும், இடைச்சொற்கள் அல்லது ஒட்டுக்கள் பற்றிய செய்திகள் இடையியலிலும், இவ்வியல்களில் சொல்ல விடுபட்டவை அதாவது இயற்சொல், கடின சொற்கள், தொகை சொற்கள், ஆகியன எச்சவியலிலும் விளக்கப்பட்டுள்ளன என்கிறார் சாஸ்திரியார்.

உருபு, உருபன், மாற்றுருபு என்னும் உருபனியல் கலைச் சொற்களைப் பயன்படுத்தவில்லையெனினும் அவை பற்றிய செய்திகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. தொகை (compoun), பின்னொட்டு (suffix), வேர்ச்சொல் (root), அடிச்சொல் (stem), சொல்லாக்கம் (Derivation), சொல்திரிபு (Inflection) போன்ற கலைச் சொற்களை சாஸ்திரியாரே ஆங்காங்கே கையாண்டுள்ளார்.

சொல் எழுத்துக்களால் ஆக்கப்பட்டமையால் எழுத்தியலின் பின் சொல்லியலில் கூறப்பட்டது என்னும் கூற்றிலிருந்து ஒன்று மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட ஒலியன்களால் ஆனது உருபன் என்றும் உருபனின் விளக்கம் பெறப்படுகின்றது (Morpheme is made up of Phonemes).

தொல்காப்பியர் பெயரியலில் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (தொ.சொ. 155) என்றார். அஃதாவது பொருள் குறித்தனவெல்லாம் சொல் என்பதாகும். உரையாசிரியர் சொல் என்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை என்பர். A morpheme is a minimum meaningful unit, made up of phonemes என்னும் உருபனின் இலக்கணம் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. சொல் என்பது ஒன்று மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட உருபன்களால் ஆனது.

தொல்காப்பியர் காலத்து தொடர்கள் பெயர், வினை என்னும் இருவகைச் சொற்களால் ஆக்கப்பட்டன. உரிச்சொல்லும், இடைச்சொல்லும் பெயர், வினை ஆகியவற்றின் பகுதியுமாக, விகுதியுமாக இருக்குமேயன்றி தனியாய் நில்லா என்னும் கருத்து.

சொல்லெனப் படுப பெயரே வினையென்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே. (தொ.சொ. 158)

இடைச்சொல் கிளவியும் உரிச் சொற்கிளவியும்
அவற்றுவழி மருங்கிற் தோன்றும். (தொ.சொ. 159)

என்னும் நூற்பாக்களால் பெறப்படுகின்றது. பிற்காலத்தில் தான் பெயர், வினை, இடை, உரி என்று சொல் 4 வகைப்படும் வழக்கு வந்துள்ளது என்பது சாஸ்திரியின் கருத்து.


தற்காலத் தமிழில் சொல்வகை, பெயர், வினை, பெயரடை, வினையடை, இடைச்சொல் என ஐந்து வகைப்படும் என்பர் மொழியியலார். பெயரும் வினையும் தனித்து நின்று தனித்து பொருள் தரும், பெயரடையும், வினையடையும் தனித்து நிற்கும்; சார்ந்து பொருள் தரும். இடைச்சொற்கள் தனித்து நில்லாது. தனித்துப் பொருள் தராது. சார்ந்து வந்து சார்ந்து பொருள் தரும்.

தொல்காப்பியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (தொ.சொ. 155) எனச் சொல்லின் இலக்கணம் கூறினும் பெயரின் இலக்கணம் கூறவில்லை. உருபு ஏற்றல் (தொ.சொ. 69), பயனிலை கோடல் (தொ.சொ.66), காலம் தோன்றாமை (தொ.செ.70) என்பது பெயர்க்கு இலக்கணம் என்கிறார் தொல்காப்பியர். இஃது பாணினி கூறும் பெயர்க்கான இலக்கணத்தை ஒட்டி அமைந்துள்ளது என்பது சாஸ்திரியாரின் கருத்து. இங்கு பெயர் என்பது யாது என்று கூறாது பெயரின் இயல்புகளே குறிக்கப்பட்டுள்ளன.

பெயர் உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும். மக்களைச் சுட்டுவது உயர்திணை என்றும், மக்களல்லாத பிறவற்றைச் சுட்டுவது அஃறிணை என்றும், தெய்வத்தைச் சுட்டும் பெயர் உயர்திணை ஆகும் என்றும் தொல்காப்பியர் கூறுகிறார். சில பெயர்கள் அஃறிணை, உயர்திணை இரண்டாகவும் வழங்கும். அவற்றை விரவுத்திணை என்பர். தொல்காப்பியர் காலத்தில் முன்னிலைப் பெயர்களும், சாத்தன் முதலிய படர்க்கைப் பெயர்களும் விரவுத் திணையாக வரும்.

சாத்தன் வந்தான்
சாத்தன் வந்தது

உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூவகைப்படும், அஃறிணை, ஒன்றன்பால், பலவின்பால் என இரு வகைப்படும்.




தமிழ் மொழியில் சாதி, எண் இவ்விரண்டையும் குறிப்பதற்கு ஒரே விகுதியாய் இருக்கின்றது. இடம் (P), எண் (N) பால் (G) என்னும் மூன்றையும் குறிக்கும் உருபுகள் பிரித்து அறிய இயலாதவாறு அமைந்துள்ளன.

வந்தான் - வா + ந் + ஆன்

ஆன் என்னும் விகுதி படர்க்கை, ஆண்பால், ஒருமை என்னும் மூன்று பொருண்மைகளைக் குறிக்கும் உருபாக அமைந்துள்ளது. தமிழ்மொழி ஒட்டுமொழி (agglutinative) வகையைச் சார்ந்தது எனினும் இங்கு அது இணைப்பு மொழியின் (synthetic) பண்பைப் பெற்றுள்ளது என்பது உற்று நோக்கத்தக்கது.

மேலும் பெயரின் பொருளை அறியாது, ஈற்றால் அவற்றின் பாலையறிதல் பெரும்பாலும் இயலாது என்பது சாஸ்திரியாரின் கருத்து.

னஃகானொற்றே யாடூஉ வறிசொல் (தொ.சொ.5)
பாண்டியன், உண்டான், கரியன்
ளஃகானொற்றே மகடூஉ வறிசொல் (தொ.சொ.6)
அவள், உண்டாள், கரியள்
ரஃகா னொற்றும் பகர பிறுதியு

மாரைக் கிளவி யுளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே (தொ.சொ.7)

ர,ப,மார் என்னும் ஒட்டுக்களுடன் முடியும் சொற்கள் பலரறிசொல்.

அவர், உண்பா, தாய்மார், நம்பியர்
ஒன்றறி கிளவி தறட ஓர்ந்த
குற்றியலுகரத் திறுதி யாகும் (தொ.சொ. 8)

ஒன்றறிசொல் து,று,டு என்னும் ஒட்டுக்களைப் பெற்றுவரும்.

அஃது, ஒன்று, இரண்டு கூயிற்று
அ ஆ வான வருஉ மிறுதி
அப்பான் மூன்றே பலவறி சொல்லே (தொல்.சொ. 9)

பலவறிசொல், அ, ஆ, வ என்னும் ஒட்டுக்களை இறுதியில் பெற்றுவரும். பல உண்டன, கரிய, யா, உண்ணா, உண்குவ எனத் தொல்காப்பியர் கூறியிருப்பினும் பெயருள் அந்நியதி இல்லை என்பதை,

இருதிணை மருங்கி னைம்பா லறிய
ஈற்று நின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே (தொ.சொ.10)

மேலே சொல்லப்பட்ட பதினோரு பின்னொட்டுக்களும் அதாவது ன,ள,ர,ப,மார்,து,று,டு,அ,ஆ,வ என்னும் ஒட்டுக்கள் வினைச்சொல்லின் இரு திணைகளிலும், ஐந்து பால்களிலும் தோன்றும் என்பதை வினையொடு என்ற சொல்லால் குறித்தனர். எனவே பெண்மகன், அலவன் என்பன னகர ஈற்றுச் சொற்களாயினும் அவை பெண்பாலும், ஒன்றன்பாலும் ஆகும். மக்கள் என்பது ளஃகான் ஈற்றுச் சொல்லாயினும் பலர் பாலாகும்.

பால் என்பதில் சாதி (திணை), எண் இவை இரண்டும் அடங்கியிருந்தாலும் எண்ணைத் தனியாகக் கூறினால் அது ஒருமை, பன்மை என இருவகைப்படும். வடமொழியில் ஒருமை, இருமை, பன்மை என எண் மூவகைப்படும். இருமை திராவிட மொழிகளில் இல்லை.

எனினும் நாம் என்பது தன்னையும், முன்நின்றவனையும் குறிப்பதால் அது ஒரு வகை இருமையாகும் என்பர். கால்டுவெல்

அவ்வாறு கூறுவதற்குக் காரணம் நாம் என்பது தன்னையும், முன் நின்றவனையும் குறிக்க (we inclusive) வழங்குவதாலும், நாங்கள் என்பது தன்னையும் படர்க்கையில் உள்ளவரையும் (we exclusive) அதாவது முன்னால் இருப்பவரைத் தவிர்த்து ஏனையோரையும் குறிக்கப் பயன்படுவதாகும். இக்கூற்று தொல்காப்பியர் ஞானத்திற்குப் பொருந்தாது என்பதற்கு இரண்டு காரணங்கள் இருப்பதாக சாஸ்திரியார் கருதுகிறார். அவை :

1. தொல்காப்பியர் காலத்து கள் விகுதி அஃறிணை இயற்பெயரில் வந்தது அன்றி உயர்திணையில் வரவில்லை என்பதால் நாங்கள் என்ற சொல்லே வழக்கில் இல்லை.

2. நாம் என்ற சொல் தன்னையும் படர்க்கையையும் குறித்தல் (we exclusive) சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணலாம் என்பதாகும்.

வினையியலின் தொடக்கத்தில்,

வினையெனப்படுவது வேற்றுமைகொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும் (தொ.சொ. 198)

என்கிறார் தொல்காப்பியர். இந்நூற்பா வினையின் இலக்கணத்தை உணர்த்துகின்றது என்றனர் உரைகாரர்கள். ஆயினும் காலமொடு என்ற சொல்லை நோக்கின் வினை மற்றொன்றையும் குறித்தல் வேண்டும் என்பது புலப்படுதலாலும், நினையுங்காலை என்றதனால் எல்லா வினையும் காலத்தை வெளிப்படையாகக் குறிக்க வேண்டியது இல்லை என்பது பெறப்படுவதாலும் இந்நூற்பா வினையின் இலக்கணத்தைக் கூறவில்லை என்பது சாஸ்திரியாரின் கருத்து. பெயரின் இயல்புகள் சுட்டப்பட்டதைப் போன்றே இங்கும் வினையின் இயல்புகளே சுட்டப்படுகின்றன, இலக்கணம் அல்ல. வினையின் இயல்பு வேற்றுமை ஏற்பது நினையுங்காலை கால இடைநிலைகளை ஏற்பதுவும் ஆகும்.

அவ்வாறாயின் வினையின் இலக்கணம் எவ்வாறு புலப்படும் என்றால், வினை ( செயல் - action ) என்ற குறியாலே பெறப்படும் என்பார் சாஸ்திரியார்.

(தொடரும்)

# தஞ்சை மன்னர் இரண்டாம் சரபோஜியின் புனிதப் பயணம் - ஒரு வரலாற்று ஆய்வு

முனைவர் பு. வேம்பரசி

புனிதப் பயணம் என்பது உலக மக்களிடையே தொன்றுதொட்டு நிலவிவரும் பழக்கமாகும். இந்தியா போன்ற பரந்து விரிந்த நாடுகளில், அரசியல் ரீதியான ஒருமைப்பாடு ஏற்படுவதற்கோ, அது நிலைபெறுவதற்கோ சந்தர்ப்பம் குறைவாக இருந்த காலத்திலேயே இந்தியாவில் கலாச்சார ஒருமைப்பாடு இருந்தது. இந்தியமக்கள் தொன்றுதொட்டு இன்றுவரை கடைப்பிடித்துவரும் தீர்த்த யாத்திரை, தலயாத்திரை போன்றவை தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் முன்னோர்கள் செய்த ஏற்பாடாகும்.

இரண்டாம் சரபோஜி மேற்கொண்ட காசி – இராமேஸ்வர பயணம் அரசியல், சமய, மருத்துவ, கலை, இலக்கியம் போன்ற சில துறைகளோடு தொடர்புடையது. இம்மன்னரின் காசிப் பயணம் பற்றி அறிவதற்கு மோடி ஆவணக் குறிப்புகளும், இலக்கியச் சான்றுகளும், கல்வெட்டுச் சான்றுகளும் உதவுகின்றன.

நவீனப் போக்குவரத்து வசதியில்லாத அக்காலத்தே 3000 பேர் அடங்கிய மாபெரும் குழுவிடம்[1] ஏறக்குறைய இரண்டாண்டுகள் காசிப் பயணத்திற்கு நன்கு திட்டமிட்டு, கல்கத்தா கவர்னர் ஜெனரல் மற்றும் சென்னை ஆளுநர் ஆகியோரின் முன் அனுமதி பெற்று, செல்லுமிடங்களிலெல்லாம் உரிய மரியாதையுடன், தங்குமிடம், உணவு, கால்நடைகளுக்குத் தீவனம், செலவுத்தொகை போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்யக் கூறி, பல்வேறு தலங்களை மனநிறைவுடன் தரிசித்து, ஏராளமான சுவடி நூல்களைத் திரட்டி, அரிய பொருள்களைச் சேகரித்து, பல கலைஞர்களை அழைத்துவந்து ஆதரித்துப் பல தொழில்களையும், கைத்தொழில்களையும் தஞ்சையில் ஊக்குவித்து வளர்ச்சியடையச் செய்து, தம் பயணத்தை நல்ல பயனுள்ள பயணமாக்கினார்.

மன்னர் தம் வடஇந்தியப் பயணத்தை அக்டோபர் 1820-இல் தொடங்கி, திருவையாறு, விருத்தாச்சலம், திருத்தணி வழியாகக் கிருஷ்ணா நதிக்கரையில் உள்ள மங்களகிரியை அடைந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் பானக நரசிம்மப் பெருமாளை வணங்கி, அக்கோயில் மரபுப்படி, பெருமாளை பூஜை செய்வதற்குத் தஞ்சை அரண்மனையிலிருந்து பெரிய வலம்புரிச் சங்கை எடுத்து, தங்கத் தகட்டினால் மூடியிட்டு, பஞ்சரத்தினத்தின் கொத்தைக் கட்டி, தம் பெயரைப் பொறித்து அனுப்பச் செய்து இறைவனுக்கு வழங்கியுள்ளார்.[2]

ஒரிசாவிலுள்ள பூரி ஜெகன்னாதரை மகர சங்கராந்தியன்று வழிபட்டு தஞ்சை அரசின் சார்பில் அறக்கட்டளை ஒன்றை நிறுவினார். அதன்படி நாள்தோறும் பன்னிரெண்டு மண்பானைகள் நிறைய சாதமும், பருப்பும், காய்கறிகளும் செய்து சுவாமிக்கு நிவேதனம் செய்து அந்நிவேதனத்தைக் குருடர்கள், முடவர்கள் உள்ளிட்ட இயலாதவர்களுக்கு வழங்கவும் அதற்காக நாள் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் ஆண்டிற்கு ரூ. 720 ஐ அக்கோயில் அதிகாரியிடம் வழங்கியதோடு ஒவ்வோர் ஆண்டும் இத்தர்மம் நடைபெறுவதற்கு ரூ. 720 அனுப்ப வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.[3]

25-07-1821 அன்று கல்கத்தா சென்று கவர்னர் ஜெனரல் ஹேஸ்டிங்ஸ் பிரபுவைச் சந்தித்து நலம் விசாரித்தபின், தன் ஒரே மகன் இரண்டாம் சிவாஜி தமக்குப்பின் தஞ்சை அரசராக அரியணை ஏறவேண்டும். ஆங்கில அரசு அவரை மன்னராக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்க, கவர்னல் ஜெனரல் அவர் கைமேல் தம் கை வைத்து உறுதியளித்தார்.[4] பின் இரண்டாம் சிவாஜியைத் தஞ்சை மன்னராக அங்கீகரித்து, சென்னை கவர்னருக்கு இசைவாணையையும் அனுப்பி, அவ்வாணை தஞ்சை ரெசிடென்ட் ஜான்ஃபைப் வழியாகச் சிவாஜிக்கு வந்து சேர்ந்தது.[5]

கல்கத்தாவின் முக்கிய இடங்களைக் கண்டுகளித்து, 04-05-1821 இல் கயை வந்தடைந்தார். கயையில் 50 நாட்கள் தங்கி, முன்னோர்களுக்குப் பல்வேறு சிராத்தங்களைச் செய்து, பின் காசி சென்றடைந்து, காசித் தம்பிரான் மடத்தில் தங்கினார். கங்கைக்கரையில் புனித நீராடி, காசி விஸ்வநாதர், அன்னபூரணி, விசாலாட்சி உட்பட

ஏராளமான தெய்வங்களை வணங்கி, கங்கைக்கரையில் 64 படித்துறைகளின் அழகினையும் கண்டுகளித்து, புனித நீராடி, புகழ்பெற்ற மணிகர்ணிகா படித்துறையிலும் நீராடி புதிய படித்துறை ஒன்றைக் கட்டினார்.[6] 16-07-1821 முதல் 23-10-1821 வரை 105 நாட்கள் காசியில் தங்கி, பின் பிரயாகை வந்தடைந்து, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி, காவடிகளை நிரப்பிக்கொண்டு நாக்பூர், ஹைதராபாத் வழியாகத் திருப்பதி வந்தடைந்தார்.

தன் தாயார் விருப்பப்படி (சரபோஜியின் காசிப்பயணம் நல்லபடியாக வேண்டும்) திருப்பதி வேங்கடேசப் பெருமாளுக்கு 149 வைரம், 50 மாணிக்கம் பொறிக்கப்பட்ட வைர நாமத்தை வழங்கி,[7] இறைவனை வணங்கி பின் காளஹஸ்தி வந்தடைந்து காளஹஸ்தீஸ்வரரையும் வணங்கிவிட்டு, பின் காஞ்சி ஏகாம்பரரையும் தரிசித்து, மன்னர் தாம் செய்த முன்னேற்பாட்டின் படி தஞ்சை ரெசிடெண்ட் வில்லியம் பிளாக்பர்ன், இரண்டாம் சிவாஜி ஆகியோரால் சிதம்பரத்தில் மன்னருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.[8] பின்னர் சீர்காழி வைத்தீஸ்வரன் கோயில், மாயவரம் வழியாகத் திருவையாறு வந்து 24-04-1822 இல் தஞ்சையை வந்தடைந்து உடன் காசிப்பயண மரபுப்படி இராமேஸ்வரம் புறப்பட்டு இராமேஸ்வரம் சென்றடைந்து, 9-5-1822 மற்றும் 10-5-1822 ஆகிய இரு நாட்கள் அங்கு தங்கி, தாம் காசியிலிருந்து கொண்டுவந்த கங்கை நீரால் இராமநாத சுவாமிக்கு அபிஷேகம் செய்து தம் எடைக்கு எடை வெள்ளியினால் துலாபாரம் செய்தும்,[9] தாராளமாகத் தானதர்மங்களைச் செய்தும் தம் பயணத்தை முடித்துக் கொண்டு, 21-5-1822 அன்று தஞ்சை வந்தடைந்தார்.

மன்னரின் காசிப் பயணத்தில் தஞ்சையில் பலதுறைகளும் பயன் அடைந்தன. மன்னர் தம் வடஇந்தியப் பயணத்தின்போது கொண்டுவந்த ரோஜா, குலால், குலேகைரா, மசூரா, மேவா, சிம்சுபா, பிலக, பொடானி க்யால்கார்ட், தேண்ட்ஸ், பாகற்காய், சுரைக்காய் முதலிய பலதரப்பட்ட தாவரங்களின் விதைகள், பூக்கள் மற்றும் அரிய தாவரங்களைத் தஞ்சையில் தமக்குச் சொந்தமான ஏராளமான தோட்டங்களிலும், தஞ்சை ரெசிடெண்ட் தோட்டங்களிலும் பயிர் செய்ததால் தஞ்சையில் தோட்டக்கலை (Horticulture) வளர்ச்சி பெற்றது.

மன்னர் கல்கத்தாவிலிருந்து பட்டுப்பூச்சிகள், பட்டுப் புழுக்கள் மற்றும் அதற்கான உணவு (மல்பரி) செய்யும்முறை பற்றி விளக்கமான கடிதங்கள் போன்றவற்றைத் தஞ்சைக்கு அனுப்பி, பட்டுப்பூச்சித் தொழிலைத் (Sericulture) தொடங்கி வளர்ச்சியடையச் செய்தார். பல்வேறு ஆவணங்கள் மூலம் தஞ்சையில் பட்டுப்பூச்சித் தொழில் வளர்ச்சியடைந்ததை அறிய முடிகிறது.[10]

கல்கத்தாவிலிருந்து கப்பல் வழியாக அனுப்பப்பட்ட அரியவகை விலங்குகள், பறவைகள் தஞ்சையில் சிவகங்கைப் பூங்காவில் வளர்க்கப்பட்டதால், அன்றே அரிய உயிரினங்களைக் கொண்ட சிறந்த பொழுதுபோக்குப் பூங்காவாகத் திகழ்ந்தது. தமிழகத்திலேயே தஞ்சையில்தான் முதன்முதலில் உயிரினப் பூங்காவைத் தோற்றுவித்தார் சரபோஜி. அதற்கு மன்னரின் சமயப்பயணம் துணை நின்றது என்றால் மிகையாகாது.

மன்னர் வடஇந்தியப் பயணத்தின் போது ஏராளமான நாணயங்களைக் கொண்டுவந்து திருவையாறு கல்யாண மகாலில் சேகரித்திருந்தார்.[11] இவற்றை இலண்டனில் நடைபெற்ற நாணயக் காட்சிக்கு ஆங்கில அரசின் வேண்டுகோளுக்கிணங்க 18-12-1851 அன்று இரண்டாம் சிவாஜி, தஞ்சை ரெசிடெண்ட் வழியாக அனுப்பியிருந்தார். அந்நாணயங்களில், இராமடங்கா மோகரா என்ற தங்க நாணயம், காசி ஷேத்திரத் துட்டு, பிரயாகம் வின்ன பைசா, நாகபுரி பைசா, அனந்தகிரி வராகன், அக்பர் மோஹரா, வெங்கடகிரி, காசி, மிர்ஜாபுரி, பத்ரிநாத் மோஹரா உள்ளிட்ட ஏராளமான நாணயங்கள் வடஇந்தியப் பயணத்தின்போது மன்னரால் சேகரிக்கப்பட்டவையாகும்.

மன்னர் காசிப்பயணத்தில் கதளகாவ் என்ற இடத்தில் எழுதப்பட்ட கடிதத்தில்,[12] மிஸ்டர் யுஷ்டவிகஷ் என்ற வெள்ளைக்கார கப்பல் கட்டும் தொழில்நுட்பக் கலைஞரை ரூ. 180 சம்பளத்திற்கு அனுப்பி, தஞ்சையில் அரண்மனை ஒன்றைக் கட்டிக் கொடுத்து, தச்சன், கொல்லன் வகையறாக்களையும் கொடுத்து அவரின் தொழில்நுட்ப அறிவைக் கொண்டு, கப்பல் கட்டும் தொழிலைத் துவங்க உத்தரவிட்டுள்ளார். 1826ஆம் ஆண்டு சாளுவநாயக்கன் பட்டினத்தில், நான்கு பெரிய பாய்மரக் கப்பல்கள் கட்டப்பட்டு, அவற்றின் வழியாக உள்நாட்டு வெளிநாட்டு போக்குவரத்தும் ஏற்றுமதி இறக்குமதியும் நடைபெற்றன.

மன்னர் கங்கைக் கரையில் 64 படித்துறைகளில் ஒன்றான மணிகர்ணிகா என்ற படித்துறையில் நீராடியதன் நினைவைப் போற்றும் வகையில், தஞ்சை கீழராஜ வீதியில் மணிகர்ணிகேஸ்வரர் என்ற புதிய கோயிலை 1827 இல் கட்டி குடமுழுக்கு செய்தார்.[13]

மேலும், காசி மற்றும் கயாவில் தாம் கண்ட கட்டட முறைப்படி, தஞ்சை அரண்மனையில் சார்ஜா மாடி என்ற ஐந்தடுக்கு உயரமான மாளிகையை எழுப்பினார். திருவையாற்றில் காவிரிக்கரையில் 1825இல் கல்யாண மகால் என்ற மாளிகையைத் தம் ஆசை நாயகிகளுக்காக எழுப்பினார்.[14] இம்மாளிகை கங்கைக்கரையில் அமைந்துள்ள மாளிகையை முன்மாதிரியாகக் கொண்டு சரபோஜியால் எழுப்பப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு மன்னரின் பயணம் கட்டடக்கலை வளர்ச்சிக்கும் துணைபுரிந்தது.

இரண்டாம் சரபோஜி ஏராளமானோர் புடைசூழ காசிப்பயணம் சென்ற காட்சி, துணி ஓவியமாக வரையப்பட்டு, தற்போது இலண்டன் இந்திய அலுவலக நூல் நிலையத்தில் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது.[15] மன்னர் தம் பயணத்தின் போது ஓவியக் கலைஞர்களை அழைத்துக் கொண்டும், வழியில் மசூலிப்பட்டிணத்தில் மாதம் பத்து புலி வராகன் சம்பளத்துடன் தாமஸ் என்ற ஓவியக் கலைஞரை அழைத்துக் கொண்டும் சென்று, தாம் கண்ட அரிய காட்சிகளைத் தம் குடிமக்கள் கண்டு இன்புறுவதற்காக வரையுமாறு செய்தார்.

காசியிலுள்ள 64 படித்துறைகளைத் தொடர் ஓவியமாகக் காட்டும் வண்ணநூல் ஒன்று, சரஸ்வதி மகால் நூலக அருங்காட்சியகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. 64 படித்துறைகளின் பெயர்களும் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.[16]

பாட்னா, மூர்சிதாபாத், காசி போன்ற இடங்களில் சிறந்து விளங்கியது. மைக்கா ஓவியங்கள் , மன்னர் தம் பயணத்தின் போது அக்கலைஞர்களைத் தம்முடன் தஞ்சைக்கு அழைத்துவந்து தஞ்சையில் அக்கலை பரவவும் காரணமாயிற்று மன்னரின் சமயப்பயணம். காசி மற்றும் பிரயாகையிலிருந்து பித்ரி தட்டுக்களைக் கொண்டுவந்து, உள்ளூர் கம்மாளர்களை அழைத்து, பித்ரித் தட்டுக்களைப் போன்ற கலைநயமிக்க வேலைப்பாடுடைய தட்டுக்களைச் செய்யுமாறு கூற,

மன்னரின் அச்சவாலை ஏற்று அவர்கள் உருவாக்கியதுதான் தஞ்சைக்குப் புகழ்சேர்க்கும் தஞ்சை கலைத்தட்டு (Thanjavur Art Plate) ஆகும்.

இரண்டாம் சரபோஜி ஒரு கல்விமான். சென்ற இடங்களிலெல்லாம் ஏடு தேடியவர். வடமொழிக் கல்வியின் நிலைக்களனாகத் திகழ்ந்த காசியில் ஆயிரக்கணக்கான வடமொழிச் சுவடிகளையும், மற்ற மொழிச் சுவடிகளையும் வாங்கி, தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் சேகரித்தார். சரஸ்வதி மகால் நூலகத்திற்கு சமஸ்கிருத சுவடிகளுக்கு அட்டவணை தயாரித்த பி.பி.எஸ். சாஸ்திரி அவர்கள் தொகுத்த வடமொழிச் சுவடிகளின் 23 விளக்க அட்டவணைத் தொகுதிகளில் உள்ள பெரும்பாலான சுவடிகளின் முன்னுரையில் ஸ்ரீமந்த் ராஜா சரபேந்திர ராஜாவால் விலைக்கு வாங்கப்பட்டு காசி தேசத்திலிருந்து அனுப்பப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று தஞ்சைக்கு உலகப் புகழை ஈட்டித் தரும் சரஸ்வதி மகால் நூலகம் இன்றைய நிலையை அடைவதற்குப் பெரிதும் காரணமாகயிருந்தவர் இரண்டாம் சரபோஜி. அவருக்கு இந்தப் புகழை ஈட்டித் தந்தது மன்னரின் காசி சமயப்பயணம்.

மன்னர் சமயப்பயணத்தின் போது, தான் கண்டுகளித்த தலங்களின் சிறப்புகளைத் தம் குடிமக்கள் கேட்டு இன்புறும் பொருட்டு, மராட்டிய அறிஞர் உட்கே கோவிந்தாச்சாரியார் கொண்டு, த்ரிஸ்தல யாத்ரேச லாவணி (மூத்தல யாத்திரை லாவணி - காசி, கயா, பிரயாகை) என்ற பெயரில் காசிப் பயணத்தை வர்ணனை செய்து இலாவணி இயற்றச் செய்தார் மன்னர்.

கல்கத்தாவில் கவர்னர் ஜெனரலைச் சந்தித்தபோது, அங்கிருந்த ஆங்கிலப் பிரதிநிதி ஒருவர், தாம் திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பு நூலைப் படித்து இன்புற்றதாகவும், அந்நூலின் மூலமொழியான தமிழில் திருக்குறள் நூலைத் தமிழ்நாட்டிலிருந்து வந்த இரண்டாம் சரபோஜியிடம் கேட்க, அதுவரை தாம் ஆளும் மண்ணில் வழங்கும் மொழியின் மகத்துவத்தை அறியாத தம் தவறை உணர்ந்து, தஞ்சை திரும்பியபின், தமிழ்மொழி மீதும், தமிழ் இலக்கியத்தின் மீதும் கருத்துச் செலுத்தி ஏராளமான தமிழ் நூல்களை வாங்கி சரஸ்வதி மகால் நூலகத்தில் சேகரித்தார். இங்ஙனம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் மன்னரின் சமயப்பயணம் துணை நின்றது.

இரண்டாம் சரபோஜியின் காசி, இராமேஸ்வர பயணம் அவருக்குத் தம் சமயத்தின் மீது இருந்த ஆழ்ந்த நாட்டத்தைப் புலப்படுத்தினாலும் அனைத்துச் சமயங்களை ஆதரித்து சமய சமரசம் கண்டவர். தஞ்சை அரண்மனையில் இந்துப் பண்டிகைகளோடு இஸ்லாமிய மற்றும் கிருஸ்துவ பண்டிகைகளைக் கொண்டாடியும் அவர்களுக்குத் தாராளமாக அன்பளிப்பு வழங்கியும், கிருஸ்துவப் பள்ளிகளுக்கு நிதி உதவி வழங்கியும், நிலக் கொடைகள் மற்றும் உலுப்பைகள் வழங்கியும் கிருஸ்துவர்களை மரியாதையுடன் நடத்தியும், இஸ்லாமிய தலமான நாகூர் தர்காவுக்குத் தங்கப்பூ வழங்கியும், அங்கு ஆண்டுதோறும் நடைபெறும் தந்தூரி விழாவிற்கு பெனாராஸ் பட்டில் தங்க வேலைப்பாடுடைய சால்வை வழங்கியும், முத்துப்பேட்டையில் உள்ள ஜாம்புவானோடை ஷெக்கு தாவீது ஒலியுல்லா தர்காவிற்குச் சென்று வழிபாடு செய்தும், தர்காவைச் சுற்றிலும் உள்ள 6-வேலி நிலத்தையும் கொடையாக வழங்கியும், சமயப் பொறையுடைமைக்கும் மதநல்லிணக்கத்திற்கும் சிறந்த முன்உதாரணமாக திகழ்ந்தார் இரண்டாம் சரபோஜி மன்னர்.

**சான்றெண் விளக்கம்**


1. த.ப.மோ.த. 5-112
2. த.ப.மோ.த 5-111,115,116.
3. த.ப.மோ.ஆ 5-135.
4. த.ப.மோ.ஆ 5-135.
5. Buddle No. 90, Sheet No. 117/2.
6. Thulajendra Rajah P.Bhonsle, "Rajah Serfoji II," PP. 84-85.
7. மூட்டை எண். 912 சி சரசுவதி மகால் பகுதி VI
8. ப. சுப்பிரமணியன், ப.ஆ. தஞ்சை மராட்டிய மன்னர் மோடி ஆவணத் தமிழாக்கமும் குறிப்புரையும் தொகுதி 1, ப. 513-514.
9. ப. சுப்பிரமணியன். ப.ஆ. மு.கா.நூல், ப. 243.
10. த.ப.மோ.த. 5-79 முதல் 82 முடிய
11. த.ப.மோ.த. 5-177.
12. ப. சுப்பிரமணியன், ப.ஆ. மு.கா.நூல். ப. 506.
13. செ. இராசு (ப.ஆ) தஞ்சை மராட்டியார் கல்வெட்டுகள் ப.12.
14. கே.எம்.வேங்கட்ராமையா தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும், சமுதாயமும் ப. 329.
15. Jaya Appusamy, "Thanjavur Paintings of the Maratha Period", P.54.
16. ம.சா. அறிவுடைநம்பி, தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த நுண்கலைகள், பக். 114-115.

# தானழிதல், தமிழகப் பண்பாட்டின் தொல்லெச்சம்

முனைவர் பட்டாபிராமன்

கற்காலம் வீரநிலைக் காலமாகும். வீரம் மிகப் பெற்றவனே மைந்துடை ஆடவன் - என்று பெருமைப் படுத்தப்பட்டான். பெருமையும் உரனும் ஆடூஉ மேன எனப் பேசியது தொல்காப்பியம்.[1] மாந்தர்களின் தொழிற் பண்பாக வீரம் விளங்கியது.

**ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய்**[2]

என்ற குறளில் இடம் பெறுகிற சான்றோர் என்பவர் வீரர்களாவர். உரையாசிரியர்கள் இதனை உறுதி செய்கின்றனர். புறநானூற்றுப் பாடலில்,

**ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே**

என்னும் வரிகளைப் பார்க்கலாம். தந்தையின் கடமை ஒருவனை வீரனாக்குவதே என்கிறார் பாடலாசிரியர் பொன்முடியார்.

காலங்கள் மாறினாலும் பழக்கங்கள் மாறினாலும் வீரப்பண்பு மட்டும் உலகெங்கும் ஒன்றாய் இருப்பதைக் கண்டறியலாம்.

முதல்நாள் நடந்த போர்க்களத்தில் கணவனை இழந்து, அடுத்தநாள் மகனை இழந்தும் மறப்பண்பு விலகா தாயொருத்தியைச் சங்கப் புறப்பாடல் காட்டுகிறது. இதே நிலையை ஜப்பான் பெண்ணொருத்தியின் கூக்குரற் பாடலில் வெளிப்பட்டதாக மகாகவி பாரதியார் 1906 ஆம் கட்டுரையிற் புலப்படுத்தியுள்ளார்.[3]

பெண்கள் ஆண்மையைப் போற்றியது உலகெங்கும் கண்கூடு. அவர்களைப் புகழ்ச்சிக்குரியதாக ஆக்கிய செயல் எப்போது கிடைத்தது? இருந்து சிறக்கும் போது பெருமை கிடைத்ததா; இறந்து சிறந்தபோது புகழ் கிடைத்ததா? எப்போது அவருக்குப் பெருமை அண்டியது?

இத்தகைய வீரர்கள் வாழ்கிற போது சிறக்கிறார்கள் என்பதைவிட இறக்கும் போதே புகழுடம்பைப் பெறுகின்றனர் என்பது வரலாறு.

பன்றிக் குத்திப் பட்டான் கல்
புலிகுத்திப் பட்டான் கல்

என்பன நடுகற்களைப் பற்றிய வாழும் ஓவியங்களான சொல்லோவியங்கள். இறந்த பின் வாழ்ந்து வருகின்ற கல்உயிர்க்காவிய அடையாளங்கள் அவை.

சாவின் விளிம்பு பற்றித் தெரிந்தே தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்ட சரித்திர நாயகர்கள் நம்மிடையே நிரம்ப உண்டு. அதன் சால்பொழுக்கமாக நம்மனோர் போற்றி ஏற்றினர். இதற்கு இலக்கியங்களில் எண்ணற்ற சான்றுகள் உண்டு. கல்வெட்டுக்களிலும் மிகுதியான பதிவுகள் உண்டு.

புறமுதுகு காட்டாமல் அதாவது இருந்து வாழாமல் உயிர் வீழ்ந்து மாய்ந்தவனையே நடுகற்கள் வெளிப்படுத்துகின்றன. இதில் எங்களுக்கும் பங்கு உண்டு என்று கூறி பெண்களும் மாய்ந்த நிலையே சதிக்கல் எனப்படும். கணவன் இறந்தபோது அந்த நெருப்பினுள் தன்னையும் அழித்துக் கொள்வதே உடன்கட்டை ஏறுதல். இலக்கியங்கள் இங்ஙனமாகக் கூறிச் சென்றமைக்கு எண்ணற்ற கல்வெட்டுக்கள் வழிமொழிந்த வரலாறு, தமிழுக்கு நிரம்ப உண்டு.

ஆணோ, பெண்ணோ உயிரைப் பிறர் நலத்திற்காக அழித்துக் கொள்ளும் முயற்சியையும் கல்வெட்டுக்களில் பரக்கக் காணலாம். இவற்றினிடையே ஊரழியக் கூடாதென்று தானழிந்த வீரனின் வரலாற்றைக் காணமுடிகிறது.

தென் வேணாட்டு மேலைக்
கருங்காலி[4]

என்னும் சொல்லோவியம் அதனை வரைந்து காட்டியுள்ளது. 1971 ஆம் ஆண்டு 114 ஆம் எண்ணுள்ள பகுதியுள் இதனைக் காணலாம். அதனுள் ஊரழியப் போகேன் என்னும் வீரவசனம் பேசப்பட்டது. ஓர் ஊர் அழிவதற்குத் தானும் ஒரு காரணமாகக் கூடாது என்று இறந்து பட்டான் என்பதைப் பிறிதொரு கல்வெட்டும் பகர்கிறது.[5]

வில்லிபுத்தூர் மற்றும் திருவரங்கக் கோபுரங்கள் மீதேறி நின்று, கொண்டகொள்கைக்காகத் தன்னை மாய்த்துக் கொண்டவர்களைக் கல்வெட்டுக்கள் அடையாளமிட்டுள்ளன.

**குழவி இறப்பினும் ஊன்றடி பிறப்பினும்**[6]

என்கிற புறப்பாடலை நாம் நன்கறிந்திருப்போம்.

இயற்கையாய் நிகழ்வுறும் இறப்பைக் கூட அடக்கஞ் செய்யும் போது வாளால் கீறியே மண்ணில் புதைத்த வரலாறு நமக்கு உண்டு.

இயற்கையாய் எதிர் வரும் சாவு நிகழ்வை விட, தெரிந்தே வரும் இறப்பு நிகழ்வையும் அதனை எதிர்கொள்கிற மனிதனையும் இந்த மண்ணும், மக்களும் வியந்தனர்; வழிபடவுஞ் செய்தனர். இவ்வகையில் நமக்குக் கிடைத்த இந்தியாவின் மூத்த தொல்லியற் கல்வெட்டாக நமக்கு அமைவது புலிமான் கோம்பைக் கல்லோவியக் காட்சியே ஆகும்.[7]

முதுமக்கள் தாழிகளும் கற்பதுக்கைகளும் கல்லெச்சங்களும் நிரம்பியுள்ள இவ்வூர்ப் பகுதி தேனி, ஆண்டிப்பட்டி அருகே உள்ளது. தெரிந்தே சாவு வரும் என்று உயிர் நீத்த ஒருவனின் இறப்பு நிகழ்வைப் பதியச் செய்த தமிழின்/தமிழகத்தின் மூத்த கல்வெட்டு அது.

**"கல்**
**பேடுதீயன் அந்தவான்**
**கூடல் ஊர் ஆகோள்"**

என்ற அக்கல்வெட்டிற்கு வயது, கி.மு. நான்காம் நூற்றாண்டு. இதற்குக் கூடலூரில் நிகழ்வுற்ற ஆகோள் பூசலில் உயிர்நீத்த பேடுதீயன் அந்துவனுக்கு எடுப்பிக்கப்பட்ட நடுகல் என்று பொருள் கூறலாம்.

ஆகோள் என்பது வெட்சித் திணையை நினைவூட்ட வந்த வாசகம். தொல்காப்பியம் இவ் உண்மையை,

**ஊர்க்கொலை ஆகோள் பூசல் மாற்றே** என்று குறிப்பிடுகிறது.

**கல்லெறிந்து எழுதிய**[8]

**... பலர் என்னை முன்நின்று கல்நின்றவர்**[9]

என்ற வரிகள், முறையே சங்க இலக்கியத்திலும் திருக்குறளிலும் இடம் பெறுகின்றன.

நடுகல்லாகிப் போன நம் முன்னோர்களைப் பற்றிய தொல்லெச்சப் பதிவுகளே இவை. புலிமான் கோம்பையின் புறத்திணைக் கல்வெட்டைக் கண்டுபிடித்தவர் கா. ராஜன் [10] வெட்சிப் போரில் உயிர் நீத்த வீரனுக்கு எடுப்பித்த இந்தியாவின் பழமைக் கல்வெட்டுப் பொறிப்பு இது என்பார் அவர்.

மேற்காண் சான்றுகளால், சான்றோர்களை (வீரர்களை) மக்கள் மதித்தனர் என்னுஞ் செய்தியும் பெண்களும் வீரங் காண்பித்துத் தன்னுயிரை அற்பமாக எண்ணி மாண்டனர் என்னும் தகவலும் புறமுதுகுக் காட்டாமல் போரிட்டு மாண்டவர்களைப் பார் முழுக்க கற்களாக வைத்து மரியாதை செய்தனர் என்பதும், இயற்கையாக வரும் இறப்பை விட, தெரிந்தே வரும் செயற்கை - சாவினை இந்த மண்ணும் மக்களும் மிகுதியாய்க் கொண்டனர் என்பதும் காட்சிப்படுத்தப்பட்டன.

**சான்றெண் விளக்கம்**


1. தொல்காப்பியம், எண் 1044, ச.வே.சு. பதிப்பு, 1998.
2. குறள், எண் 69
3. பாரதி தரிசனம், என்சிபிஹெச் வெளியீடு, தொகுதி 2
4. வடஆர்க்காடு மாவட்டக் கல்வெட்டுகள், எண் 114, தமிழகத் தொல்லியல் துறை வெளியீடு. 1971
5. மேலது. எண் 115.
6. புறநானூற்று வரிகள்
7. கா.ராஜன், கல்வெட்டியல், ப.138
8. மலைபடுகடாம், வரி 113
9. குறள், எண் 771.
10. கா. ரா ஜன், கல்வெட்டியல், ப. 139.

# சிலேடைகள்

முனைவர் க. பரமேஸ்வரன்

## நுங்கும் சிவனும்

கருநிறம் போர்த்திருக்கு மேல்முடி பேர்கழுத்தில் படமெடுக்கும்

பொருப்பில் வரும்உடை நாருமுக் கண்ணீரிடுவால்

விரும்புமுயிர் கையெடுக்கும் – அரிவாளரியும்

பாருலகில் சிவனும் நொங்கெனவே

**சிவன்:** கருநிறமான சிவனாரின் தலைமுடி போர் செய்வது போல போர்த்திருக்கும். பேர்பெறுகின்ற கழுத்தில் பாம்பு படமெடுக்கும் மலைப்பகுதியில் வருபவர், நார்வகையான உடை அணிபவர் சிவனார் என்று விரும்பி கையெடுத்து வணங்குபவர்களைக் கண்டு மூன்று கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் விடுவர்.

**நுங்கு:** கருப்பு நிறமாக வெளித்தோற்றம் காணப்படும். மேல்முடியை (பச்சை இதழ்) தனியாகப் பேர்த்தெடுத்தால் காய்ந்து விடும். மலைப்பகுதியிலிருந்து வரும். உடைத்தால் நாரு வரும். மூன்று கண்களை (சுளை) விரலால் தொட்டால் நீர் வரும். விரும்புகின்றவர் கையினால் எடுப்பர். அரிவாள் என்ற கருவி மூலமே அரிந்து (வெட்டி) சாப்பிட முடியும்.

## அருஞ்சொற்பொருள்

**சிவன்:** போர்த்திரு – போர் +திரு (மேன்மை), முடி – முடி (நீட்டல் விகாரம்) பொருப்பு – மலை, உடை – அணியும் உடை, முக்கண்ணீரிடுவால் – முக்கண்+கண்ணீர்+ இடுவால், முக்கண் – மூன்று கண்கள், இடுவால் – துன்பத்தால், அரிவாளரியும் – அரிவாள் + அரியும், அரிவாள் – சிவன், அரியும் – கூர்மை, பாருலகம் – பார் + உலகம், பார் – உலகம்.

**நொங்கு:** முடி – பச்சை இதழ்முடி, பேர் – பேர்த்தெடுத்தல், படமெடுக்கும் – படம்+எடுக்கும், பட – அழிந்து விடும் (பட்டு விடும்), உடை – உடைத்தல், அரிவாள் – வெட்டுகின்ற கருவி (வாள்), அரியும் – வெட்டும்.

**எறும்பும் யானையும்**

சேரும் உணவு சேரறிக்கும் புற்றுக்களை நாக்கால்
சுருட்டும்பின் புற்வாயிற்சேரும் செமிக்கும் – கடிப்பினீர்
பருகும் நசுக்கிலிறக்குமுயிர் நிறம்பலமுறும்
பெறுயானை எறும்புக்கு நிகரெனவே

**எறும்பு :** சேர்கின்ற உணவு சேர்ந்தவுடன் மண்புற்றுக்களைப் பறிக்கும். அவ்வாறு பறித்த புற்றுக்களின் வளைவாயில், சேர்கின்ற உணவை, தன் நாக்கினால் சுருட்டிக்கொண்டு போய்ச் சேர்த்துச் சேமிக்கும். கடித்தபின்பு நீர் பருகும். நசுக்கிவிட்டால் இறந்து விடும். பல நிறமுடைய எறும்புகள் ஊர்ந்து வரும்.

**யானை :** நான்கு கால்களினால் நிலத்திலுள்ள புற்களை ஒரு சேர அரித்தெடுத்து சேர்கின்ற உணவினை (புல்) சுருட்டி பின்பு வாயினுள் சேர்த்துச் செமித்துவிடும். கடித்து மென்றபின்பு நீர் பருகும். நசுக்கினால் பல உயிர்கள் இறந்து விடும். பலம் அதிகமுடையது.

**அருஞ்சொற்பொருள்**

**எறும்பு :** நாக்கால் – நாவினால், செமிக்கும் – சேமிக்கும் (விகாரம்), புற்று – எறும்பு புத்து, புற்வாயில் – எறும்பு புத்தின் வாயில்.

**யானை :** நாக்கால் – நான்கு கால், புல்வாயில்சேரும் – புல் + வாயில்+ சேரும்.

**ஆமையும் பூனையும்**

ஆள்கண்டால் பதைபதைக்கும்
நாய்கண்டாலுள்ளோடும் தாலொலி கேட்டாக்
கிடையோடு – நீரிலாவாழா
முகட்டோடு அறிகுறி நடதாவளலி ஓடும்
நகாமையும் பூனையும் நிகரனெவே –

**ஆமை :** ஆளைப்பார்த்து பயப்படும். நாயைப் பார்த்து ஓட்டுக்குள் ஓடி விடும். நாய் குரைக்கும் சத்தம் கேட்டு மந்தமாகக் கிடந்து விடும். நீரில்லாமல் வாழாது. முகத்தின் அருகிலுள்ள ஆமைஓட்டை அடையாளமாக வைத்து எலி ஓடிவிடும். (தாவி வருகின்ற எலி, ஆமையின் முகத்தைப் பார்க்கும் முன்னே ஓட்டைக் கண்டு பயந்து ஓடிவிடும்). இவ்வாறு நகமுடைய ஆமைபூனைக்கு நிகராகிறது.

**பூனை :** ஆளைப் பார்த்தால் பயப்படும். நாயைப் பார்த்து மறைந்து ஓடி ஒளிந்துவிடும். நாவின் சத்தம் கேட்டால் இடையே ஓடும் (மனிதர் அதட்டுவதால்). குடிப்பதற்கு நீர் இல்லாவிட்டால் வாழ முடியாது. வீட்டின் முகட்டில் (முகடு) பூனை நடப்பதையும், தாவுவதையும் அறிகின்ற எலி ஓடிவிடும்.

**அருஞ்சொற்பொருள்**

**ஆமை :** தாலொலி - (தால் + ஒலி) நாவின் சத்தம், கிடையோடு - மந்தமான ஓடு, ஓடு - ஆமைஓடு.

**பூனை :** உள்ளோடும் - மறைந்து ஓடும், முகட்டோடு - வீட்டின் உள்முகப்புபாகம், (முகடு) ஓடும் - எலி ஓடும், அறிகுறி - அடையாளம்.

**நுங்கும் கிளியும்**

பச்சைமுடியிருக்கும் நாக்கால் நாருரிக்கும்
நச்சி நாக்குரைக்கும் நோக்கின் வளையமாகும்
பட்சித் தால்பறக்கும் மட்டித்தால் கூடு
காய்த் தான்துறக்கும் நொங்கும்கிளியென

**நுங்கு :** பச்சையான (இதழ்) மூடியிருக்கும். நான்கு காலினையுடைய அணில் நாரினை உரித்துத் துளைத்து விடும். நொங்கை விரும்பியவர்களின் நாக்கு எச்சில் ஊறும்படி உரைக்கும் (கூறும்). குறிப்பிட்ட நாக்கினால் வளையமாக ஒரு கோடு பச்சை மூடியின் கீழ் காணப்படும். உண்டால் பசி பறந்து விடும். அழித்துவிட்டால் கூடாகிவிடும் (நுங்குக் கூடு) அதுமட்டுமல்லாது விதையையும் துறந்து விடும்.

**கிளி :** பச்சையான முடிகள் இருக்கும். பழங்களின் நாருகளை (தோல்) நாக்கினால் உரிக்கும். விரும்பினால் பேசும். குறிப்பிட்டு நோக்கினால் கழுத்தில் கருப்பு வளையம் இருக்கும். கிளி, பகைவர் வந்தால் பறந்துவிடும். கூட்டினைப் பூசிக்கொள்ளும். வஞ்சனைகளைத் துறக்கும் (வஞ்சனைகள் தெரியாது).

**அருஞ்சொற்பொருள்**

**நொங்கு :** முடி - மூடி (நீட்டல் விகாரம்), நாக்கால் - நான்கு காலுடைய அணில், நாருரிக்கும் - நார் + உரிக்கும். நச்சி - விரும்பி, பட்சித்தல் - உண்டல், மட்டித்தல் - அழித்தல், காய் - விதை, கூடு - நொங்கின் கூடு, நுங்கு - நொங்கு.

**கிளி :** பச்சைமுடி - பச்சையான சிறகுகள், நாக்கால் - நாக்கினால்,

நாக்குரைக்கும் – நாக்கு உரைக்கும், பட்சித்தால் – பட்சி + தால், பட்சி – கிளி, தா – பகைவர், மட்டித்தல் – பூசுதல், கூடு – கிளிக்கூடு.

**கொக்கு மாங்காய்க்கு நிகர்**

**கொக்கிளையில் கொக்காயமரும் மரக்காலளக்கும்**
**உள்ளோடு வெள்ளை**
**தக்கமேல் பறக்கும் மெச்சுவார் – மச்சவிழி**
**அலகால் பிடிக்கும் இத்தரையில்**
**நிலமா கொக்கெனவே**

**கொக்கு** : மாமரக்கிளையில் அமரும். உறுதியான காலால் நீரினை அளக்கும். மறைத்தாலும் வெள்ளைநிறம் பளிச்செனத் தெரியும். தாக்கினால் பறந்துவிடும் அல்லது குறிப்பிட்ட தொலைவு பறக்கும். அதனின் கண்களை மச்சம் என்பர். அதன் விழி மீனை நோக்கியபடியே இருக்கும். நீண்ட வாயால் மீனைப் பிடிக்கும். இந்த உலகில் நிலத்தில் வளரும் மாமரத்துக்கு மற்றொரு பெயர் கொக்கு.

**மாங்காய்**: மாங்கிளையில் மாங்காய்களாய் இருக்கும். பிஞ்சுகளைப் படியில் (அளவை) அளப்பர். உட்பகுதி வெள்ளையாக இருக்கும். அடித்தால் சிதறும். பெண்களின் கண்களுக்கு மாவடுவை உவமையாகக் கூறுவர்.

**தேளும் வானமும்**

**கொடுக்கும் இருக்கும் பிறை வந்து நஞ்சிருக்கும்**
**படியும் சருகில் கொடிதரித்து விடுமிடிக்கும்**
**கருப்பு நிறமிருக்கும் – என்கொள்**
**கருந்தேளும் விண்ணுமென்று.**

**தேள் :** கொட்டக்கூடிய கொடுக்கு இருக்கும். சுவற்றிலுள்ள தீபம் ஏற்றும் மாடத்தில் வந்து இருக்கும். இருட்டான மாடத்தில் வந்தால் அடித்து நைந்து போய்விடும். சருகில் படுக்கும். கொடிகளைப் பிளவான இரு கவ்வையால் கத்தரித்து பின் இடிக்கி பிடித்துக் கொள்ளும். கருப்பு நிறமாகவும் இருக்கும். அத்தகைய கருந்தேள் விண்ணுக்கு நிகர்.

**வானம் :** மழையைக் கொடுக்கும். இல்லாவிட்டால் மழை தராமலேயே சும்மாவே இருக்கும். பிறை மீது மேகம் படரும் போது நைந்தது போல பிறை காணப்படும். பனித்திரள்கள் சருகில் படியவிடும் அல்லது மழைத்துளிகள் சருகில் படியும். மின்னல் கொடி தரித்த பின்பு இடிஇடிக்கும். கருமையான விண்ணும் கருந்தேளுக்கு நிகராகும் என்று கொள்ளலாம்.

# கலைக்களஞ்சியத்தின் தேவையும் அதன் பன்முகப்பட்ட வரலாறும்

முனைவர் கூ.முத்தன்

## முன்னுரை

விலங்குகளிலிருந்து வேறுபடாமல் விலங்காகத் திரிந்த மனிதனுக்கு முதலில் உணவுத் தேடல் மட்டுமே வாழ்க்கையாக இருந்தது. அப்படி உணவு தேடியதில் அன்றைய தேவையை மட்டுமே கவனத்தில் கொண்டு தேடினான். காலப்போக்கில் அவனது சிந்தனை கூர்மைபெற ஒருநாள் தேடிய உணவை ஒரேநாளில் உட்கொள்ளாது, மறுநாள் தேவையையும் கருதி அவ்வுணவைப் பாதுகாக்கக் கருதினான். இந்தப் பாதுகாப்புத் தேடலே அவனைப் பல நிலைகளில் நாகரிகம், பண்பாடு, மரபு என்ற கட்டுக்குள் அழைத்துச் சென்றது. தனிமனிதனிலிருந்து வேறுபட்ட அவன் குழுவிற்குள் நுழைந்தான். இந்தக் குழு அவனைப் பல்வேறு பரிணாமத்தில் வளர்த்தெடுத்தது. குடும்பம், அரசு, தொழில் எனப் பல்வேறு நிறுவனத்தோடு மனிதன் கட்டமைக்கப்பட்டான். இங்குதான் அவன் தன் உணவு, மொழி, கலை, பண்பாடு, மரபு, அவன் உருவாக்கிய தத்துவம், உளவியல், கணிதம், உலகம் என அனைத்தையும் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்று அக்கறை கொண்டான். அந்த அக்கறையின் விளைவு தான் கலைக்களஞ்சியப் பணியாகும். இக்கலைக்களஞ்சியப் பணியின் பயன்பாட்டினையும் அதன் பன்முகப்பட்ட வரலாற்றினையும் வெளிக்கொண்டு வருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கலைக்களஞ்சியம் - சொற்பொருள் விளக்கம்

ஆங்கிலத்தில் என்சைக்ளோப்பீடியா என்பதுபோல தமிழில் கலைக்களஞ்சியம் உள்ளது. மக்கள் கற்று அறியவேண்டிய முக்கியப்பொருள்கள் அனைத்தும் அடங்கியது என்பது அதன் பொருளாகும். கலைக்களஞ்சியம் என்று தமிழில் குறிப்பிடும்போது கலை என்னும் சொல் அழகுக் கலைகளைக் குறிப்பதுடன் பல்கலைக்கழகம், கலைக்கல்லூரி என்னும் சொற்றொடர்களில் குறிப்பதுபோல எல்லா அறிவுப் பொருள்களையும் குறிப்பதாகும்.

கலைகள் அறுபத்து நான்கு என்று கூறுகின்ற இடத்தும் கலை என்னும் சொல் பல்கலைக்கும் பொதுவாக நிற்றலைக் காணலாம். கலைக்களஞ்சியம் அகராதியிலிருந்து வேறுபட்டதாகும். ஒரு சொல்லின் பொருள், அதன் வேர்ச்சொல் முதலிய அச்சொல்லைப் பற்றி அறிய வேண்டுவனவற்றை மட்டுமே அகராதி தரும். கலைக்களஞ்சியம் ஒரு பொருளைப் பற்றி அறியவேண்டிய தகவல்களைச் சுருக்கமாகவும், நுட்பமாகவும் கூறும். இதுவரை மனிதன் அறிந்துள்ள அறிவுப் பொருள்களிலிருந்தும், அழகுப் பொருள்களிலிருந்தும் சாரமானவற்றைப் பற்றித் தனித்தனியாக அகரவரிசையில் சுருக்கமாகக் கூறும் நூலே கலைக்களஞ்சியமாகும்.[1] களஞ்சியம் என்னும் சொல் மக்கள் வழக்கில் இன்றும் பயின்றுவருவதைக் காணலாம். பொருட்களை அழிந்து போகாமலும், பாதுகாப்பாகவும் சேமித்து வைத்திருக்கும் ஒன்றைக் களஞ்சியம் என்பர். அதைப் போன்று பல்வேறு துறைகளைச் சார்ந்த கூறுகளை வகைதொகைப்படுத்தித் தொகுத்து வைத்திருக்கும் ஒன்றைக் கலைக்களஞ்சியம் எனலாம். இதனை அறிவுத்துறை, கலைத்துறை, வாழ்வியல் துறை முதலான எல்லாக் கூறுகளைப் பற்றியும் மனிதன் தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகளை அகர வரிசைப்படுத்தித் தொகுப்பதே கலைக்களஞ்சியம்[2] என்றும், பல்வகைக் கலைத் தலைப்புகள் பற்றிய தகவல்களைத் தமிழில் திரட்டித் தருவது கலைக்களஞ்சியம்[3] என்றும் அறிஞர்கள் வரையறுத்துக் கூறுவர். எனவே பல்வேறு காலங்களில் தோன்றிய கலைச்சொற்களுக்கான கருத்துக்களைத் தேக்கி வைத்திருக்கும் கருவூலமேகலைக்களஞ்சியம் எனலாம்.

**கலைக்களஞ்சியம் தோன்றிய வரலாறு**

பொருள் அனைத்தையும் உள்ளடக்கிய கலைக்களஞ்சிய நூல் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனையை மேலைநாட்டில் முதன்முதலாக வெளியிட்டவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்க நாட்டில் வாழ்ந்தவரும் மேல்நாட்டு அறிவியல்கலைக்கு வித்திட்டவர் என்று கருதப்படுபவருமான அரிஸ்டாடில் என்பவரே ஆவார். அவருடைய சிந்தனையை ஏற்று உலகின் பல நாட்டுச் சிந்தனையாளர்களும் அத்தகைய கலைக்களஞ்சியத்தை உருவாக்க முயன்றனர். எனினும் என்சைக்கிளோப்பீடியா என்னும் சொல்லை முதன்முதலில் கையாண்டவர் ஜெர்மனியைச் சேர்ந்த ரிங்கல் பர்ஜியஸ்

என்பவரே ஆவார். அவர் அச்சொல்லை கி.பி. 1541இல் பயன்படுத்தினார். ஆனால் தற்பொழுது வெளிவரும் கலைக்களஞ்சியங்களில் பொருள்களை அகரவரிசைப்படுத்தித் தருவதைப் போல முதன்முதலில் அகரவரிசைப்படுத்தித் தந்தவர் ஜெர்மனியைச் சேர்ந்த ஆல்ஸ்டெட் (1588-1638) என்பவரே ஆவார்.

உலகில் முதன்முதலாகக் கலைக்களஞ்சியத்தை உருவாக்க வேண்டும் என்று சிந்தித்தவர்கள் சீனநாட்டு மக்களே ஆவர். ஆனால் அவர்கள் உருவாக்கிய நூலில் இக்காலத்துக் கலைக்களஞ்சியங்களில் அறிஞர்கள் எழுதும் கட்டுரைகள் காணப்பெறுவதைப் போல கட்டுரைகள் காணப்பெறவில்லை. சீனர்களின் கலைக்களஞ்சிய நூல் அதுவரை இயற்றப்பட்ட நூல்களிலிருந்து அரிய கருத்துக்களைத் திரட்டித்தரும் தொகுப்புப் பணியாகவே அமைந்திருக்கின்றது. இத்தகைய சீனநூல் கி.பி.10ஆம் நூற்றாண்டிலேயே வெளிவந்திருக்கின்றது. கி.பி.14 மற்றும் 15ஆம் நூற்றாண்டுகளிலும் சீனமொழியில் அரிய கலைக்களஞ்சிய நூல்கள் வெளிவந்திருக்கின்றன. ஆனால் கி.பி. 18ஆம் நூற்றாண்டில் சீனமொழியில் 5020 தொகுதிகளைக் கொண்ட கலைக்களஞ்சிய நூல்கள் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்க சாதனை முயற்சியாகும். அதன் பிரதி ஒன்று எழுநூறு தொகுதிகளாகக் கட்டப்பட்டு லண்டனில் உள்ள பிரிட்டீஸ் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

ஆங்கில மொழியில் முதன்முதலாகப் பொருட்களை அகரவரிசைப்படுத்தி கி.பி.1704இல் அச்சிட்ட பெருமைக்குரியவர் லண்டனில் வாழ்ந்த ஜான் ஹாரீஸ் (1667 - 1719) என்பவராவார். அதன் பின்னர் இருபத்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் சேம்பர்ஸ் என்பவர் ஜான் ஹாரீஸின் கலைக்களஞ்சியத்தை விடச் சிறப்பானதொரு கலைக்களஞ்சியத்தைத் தயாரித்தார். 1948-49இல் வெனீஸ் நகரத்தில் வெளியிடப்பட்ட சேம்பர்ஸ் கலைக்களஞ்சியத்தின் இத்தாலிய மொழிபெயர்ப்பே முதன்முதலில் இத்தாலிய மொழியில் தோன்றிய கலைக்களஞ்சியமாகும்.

ஜெர்மனியில் ஜெட்லர் என்னும் புத்தக விற்பனையாளர் தயாரித்த அறுபத்து நான்கு தொகுதிகளைக் கொண்ட கலைக்களஞ்சியம் 1932-1950களில் வெளியானது. அக்கலைக்களஞ்சியம் இக்காலத்துக் கலைக்களஞ்சியங்கள் பலவற்றின் சிறப்பம்சங்களைக் கொண்டதாகும். பல துறைகளிலும் உள்ள பொருட்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு

இக்கலைக்களஞ்சியம் தற்பொழுதும் ஒரு முக்கியப்பார்வை நூலாகத் திகழ்ந்து வருகின்றது. பிரான்சில் வாழ்ந்த மில்ஸ் என்னும் ஆங்கிலேயர் ஒரு புத்தக வெளியீட்டுக் கம்பெனிக்காக சேம்பர்ஸ் கலைக்களஞ்சியத்தைப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்தார். ஆனால் அதனை வெளியிட்டவர் அதில் திருப்திகொள்ளாமல் பீடரோ என்னும் பிரெஞ்சுக்காரரிடம் ஒப்படைத்தார்.[7] அவர் மொழிபெயர்ப்பதை விட்டுவிட்டு புதிதாக எழுதுவதற்கு ஏற்பாடு செய்தார்.

### என்சைக்ளோப்பீடியா பிரிட்டானிக்கா

தற்போது உலகத்திலுள்ள கலைக்களஞ்சியங்களில் மிகவும் புகழ்பெற்றது ஆங்கில மொழியில் வெளிவந்துள்ள என்சைக்ளோப்பீடியா பிரிட்டானிக்கா என்னும் கலைக்களஞ்சியமாகும். இக்கலைக்களஞ்சியப் பணி 1768-இல் தொடங்கப்பெற்றது. இக்களஞ்சியம் முதலில் 100 சிறு பகுதிகளாக வெளியிடப்பெற்றது. பின்னர் மூன்று தொகுதிகளாக 2,670 பக்கங்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டது. அதன்பின்னர் திருத்தியமைக்கப்பட்ட பல பதிப்புக்கள் வெளியாகி 1929-இல் பதினான்காம் பதிப்பு வெளியாயிற்று. இப்பதிப்பு இருபத்து ஐந்து தொகுதிகளாக வெளிவந்தது. ஒவ்வொரு தொகுதியும் ஆயிரம் பக்கங்களைக் கொண்டு சுமார் ஐம்பதாயிரம் பொருள்கள் விளக்கப்பட்டுள்ளன. பதினைந்தாயிரம் படங்கள் இடம்பெற்றுள்ளன. இதனைத் தயாரிப்பதற்காக இருபத்து ஐந்து இலட்சம் டாலர்கள் செலவு செய்திருக்கிறார்கள். இக்கலைக்களஞ்சியத்திற்காகச் சுமார் மூவாயிரம் அறிஞர்கள் கட்டுரைகளை எழுதியுள்ளனர். நோபல் பரிசுபெற்ற இருபத்து ஐந்து அறிஞர்களின் ஒத்துழைப்பையும் பெற்றிருக்கிறார்கள்.[8]

### சிறந்த கலைக்களஞ்சியங்கள்

இங்கிலாந்து நாட்டில் வெளியாகியுள்ள எவ்வரிமான்ஸ், சேம்பர்ஸ் ஆகிய இரு கலைக்களஞ்சியங்கள் உலகில் சிறந்த கலைக்களஞ்சியங்களாகும். இதில் சேம்பர்ஸ் கலைக்களஞ்சியம், ஜெர்மன் மொழியில் தயாரித்த கான்வர்சேஷன் லெக்சிகன் என்னும் நூலைத் தழுவியதாகும்.[9] தொடக்கக் காலங்களில் தயாரிக்கப்பட்ட கலைக்களஞ்சியங்களில் வரலாறு, இலக்கியம் தொடர்பான செய்திகளே அதிகம் இடம்பெற்றன. ஆனால் இக்காலத்தில் அறிவியல் தொழில்நுட்பம் தொடர்பான தகவல்கள் மிக முக்கியமாக இருப்பதால்

தற்போது வெளிவரும் கலைக்களஞ்சியங்களில் அறிவியல் செய்திகளுக்கே அதிக இடம் ஒதுக்கி வருகிறார்கள். பிரிட்டானிக்காவின் பதினான்காவது பதிப்பைத் தயாரித்தபோது அதன் ஆசிரியர் குழுவினர் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் தங்கியிருந்து வேலை செய்துவந்தனர். இருப்பினும் அமெரிக்காவைப் பற்றிய செய்திகள் அதிகம் இடம்பெறவில்லை என்ற காரணத்தால் அமெரிக்கர்கள் தங்கள் நாட்டுச் செய்திகள் மிகுதியாகச் சேர்த்து முப்பது தொகுதிகளில் என்சைக்ளோப்பீடியா அமெரிக்கானா என்ற கலைக்களஞ்சியத்தைத் தயாரித்து வெளியிட்டிருக்கின்றார்கள்.[10] இதைப் போன்றே ஒவ்வொரு நாட்டவரும் கலைக்களஞ்சியத்தைத் தயாரிக்கும் பொழுது தத்தம் நாட்டுச் செய்திகளுக்குச் சிறப்பான இடம் அளித்து வந்துள்ளனர்.

## இந்திய நாட்டில் கலைக்களஞ்சியத்தின் உருவாக்கம்

இந்திய நாட்டில் பண்டைக்காலத்தில் எல்லாப் பொருள்களைப் பற்றியும் சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்கங்களுடன் ஒரே நூலில் தரவேண்டும் என்ற சிந்தனை இருந்திருக்கிறது. மும்பை மாகாணத்தில் கல்யாண் என்ற நாட்டை ஆண்ட பூலோகமல்ல சோமேஸ்வரன் என்ற சாளுக்கிய மன்னன் கி.பி.1131-இல் கலைக்களஞ்சியம் போன்ற நூல் ஒன்றினை உருவாக்கியுள்ளான். அந்நூலின் பெயர் அபில ஷிதார்த்த சிந்தாமணி என்பதாகும். விளையும் பொருள்களையெல்லாம் வழங்கும் சிந்தாமணி என்பது அதன் பொருளாகும்.[11] அந்த நூலில் விளக்கப் பொருட்களுடன் வேறு பல புதிய பொருட்களையும் சேர்த்துக் கன்னட நாட்டிலுள்ள இக்கேரியில் அரசாண்டு கொண்டிருந்த பசவப்ப நாயக்கன் என்ற பெயர் கொண்ட மன்னன் சிவதத்துவ ரத்தினாகரம் என்ற நூலை இயற்றினான். அதன் பின்னர் இந்த நூல்களை ஆதாரமாக வைத்துப் பல சுருக்கமான நூல்கள் தோன்றின. 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கல்கத்தாவில் ராஜா ராதா காந்தேவர் என்பவர் நவீன முறையில் அகராதியாகவும் கலைக்களஞ்சியமாகவும் கருதத்தக்க சப்தகல்பத்ருமம் என்ற நூலை வெளியிட்டார். பழைய ஒட்டுப் பிரதிகளிலிருந்து திரட்டிய செய்திகளைக் கொண்டு பிரபஞ்ச ஹிருதம் என்ற சிறிய கலைக்களஞ்சியம் ஒன்றைத் திருவனந்தபுரத்திலிருந்து வெளியிட்டுள்ளார்கள். அதனை ஆக்கியோர் பெயர், காலம் பற்றிய செய்திகள் அந்நூலில் குறிப்பிடப்படவில்லை. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்கத்தாவிலிருந்து தாராநாத் தர்க்க வாசஸ்பதி என்பவர் வாசஸ்பத்தியம் என்ற நூலைத் தொகுத்துள்ளார். அந்நூல்

அகராதியாகவும், கலைக்களஞ்சியமாகவும் அமைந்து, விசாகப்பட்டினத்திலிருந்து பரவஸ்து வெங்கடரங்கா சார்லு என்பவர் சப்தார்த்த சர்வஸ்வம் என்னும் சிறிய கலைக்களஞ்சிய நூலை 1859-இல் தொடங்கி நாற்பது ஆண்டுகளில் முடித்திருக்கிறார்.[12] என்ஸைக்ளோப்பீடியா பிரிட்டானிக்காவைப் போல சமஸ்கிருதத்தில் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது இன்னும் அச்சிடப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மலையாளத்தில் 1899-ஆம் ஆண்டில் பைலோபால் என்பவர் புராண இதிகாசங்களின் பொருளை அகர வரிசைப்படுத்தி புராணகதா நிகண்டு என்னும் நூலை வெளியிட்டுள்ளார். மலையாள இலக்கியம், வழக்கங்கள், கதைகள் முதலியவற்றையும் சேர்த்து சாகித்திய நிகண்டு என்னும் பெயரில் 1927-இல் ஒரு சிறிய கலைக்களஞ்சிய நூல் ஒன்று மலையாள மொழியில் வெளிவந்துள்ளது. தேவிடி சமீன்தாரான பிரசாத் பூபாவடு என்பவர் ஆந்திர விஞ்ஞான[13] என்ற பெயரில் ஏழு தொகுதிகளைக் கொண்ட களஞ்சியம் ஒன்றை 1938-இல் வெளியிட்டுள்ளார். 1920இல் எஸ்.வீ.கெட்கெர் என்பவர் மராத்திய மொழியில் மகாராஷ்டிரிய ஞானகோஷ் என்ற பெயரில் ஒரு கலைக்களஞ்சியத்தை இருபத்து எட்டுத் தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். இவரே குஜராத்தி மொழியிலும் ஒரு கலைக்களஞ்சியத்தை வெளியிட்டுள்ளார். இவரே குஜராத்தி மொழியிலும் ஒரு கலைக்களஞ்சியத்தை வெளியிட்டுள்ளார். 1936-இல் எஸ்.கரந்த் என்பவர் கன்னடமொழியில் பால பிரபஞ்ச என்னும் மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். பி.கோபால்ரெட்டியைத் தலைவராகக் கொண்ட ஆந்திரபாஷாசமிதி தெலுங்கில் ஆந்திர விஞ்ஞான சர்வஸ்வமு என்ற கலைக்களஞ்சியத்தை வெளியிட்டிருக்கிறது.[14] இக்களஞ்சியம் அனைத்துப் பொருட்களையும் அகரவரிசையில் வெளியிடாமல் தனித்தனிப் பொருளுக்குத் தனித்தனித் தொகுதிகளாக வெளிவந்திருக்கின்றது.

**தமிழில் கலைக்களஞ்சியப் பணி**

தமிழில் 1902-இல் யாழ்ப்பாணம் நாவல் கோட்டத்தைச் சேர்ந்த அ.முத்துத்தம்பிப்பிள்ளை புராணம், இதிகாசம், இலக்கியம் ஆகியவற்றிலிருந்து பொருள்களைத் திரட்டி அவற்றை அகரவரிசைப்படுத்தி அபிதானகோசம் என்ற நூலை வெளியிட்டார். 1908-இல் சென்னை கிருத்துவக் கல்லூரித் தமிழாசிரியர் ஈக்காடு

ரத்தினவேலு முதலியார் தமிழ் நூல்களிலும் சமஸ்கிருத நூல்களிலும் உள்ள சிறப்புப் பெயர்களுக்கு விளக்கம் எழுதிச் சிறப்புப் பெயர் அகராதி என்ற நூலை வெளியிட்டார். 1910-இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய சிங்காரவேலு முதலியார் அபிதான சிந்தாமணி என்னும் பெயரில் ஒரு நூலை வெளியிட்டார்.[15] அதில் புராணம் இதிகாசம் இலக்கியம் ஆகியனவற்றுடன் மேலும் பல விளக்கப் பொருள்கள் இடம்பெற்றுள்ளன. 1938-இல் டி.வீ.சாம்பசிவம்பிள்ளை மருத்துவம், தாவரவியல், வேதியியல் ஆகிய பொருள்கள் குறித்து ஒரு கலைக்களஞ்சியத்தை மூன்று தொகுதிகளாக வெளியிட முயன்றார். ஆனால் அவற்றுள் இரண்டு தொகுதிகள் மட்டுமேவெளியாகி உள்ளன.

இந்திய மொழிகளில் முதல் முயற்சியாக தி.சு.அவினாசிலிங்கம் தோற்றுவித்த தமிழ் வளர்ச்சிக்கழகம் தமிழில் கலைக்களஞ்சியத்தை வெளியிடும் பணியை 1947ஆம் ஆண்டு தொடங்கியது. அப்போது தி.சு.அவினாசிலிங்கம் தமிழ்நாட்டில் கல்வி அமைச்சராக விளங்கினார். தமிழ் வளர்ச்சிக் கழகத்தைத் தோற்றுவித்து, தமிழில் கலைக்களஞ்சியப் பணியைத் தொடங்கி வைத்தது; முற்றுப்பெறச் செய்தது ஆகிய இரண்டு அரிய பணிகளைச் செய்த பெருமைக்கு உரியவராக தி.சு.அவினாசிலிங்கம் திகழ்ந்தார். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக, கலைக்களஞ்சியம் தயாரிக்க பெரியசாமித்தூரன் பிரதமஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவருடைய தலைமையில் 1948-இல் கலைக்களஞ்சியப்பணி துவங்கப்பட்டு 1968-இல் முடிக்கப்பட்டது. மொத்தம் பத்துத் தொகுதிகளாக வெளியிடப்பட்டது. ஒவ்வொரு தொகுதியும் 750 பக்கங்களைக் கொண்டு மொத்தம் 7500 பக்கங்களாக வெளிவந்துள்ளன. 1200 அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் 15000க்கும் மேற்பட்ட தகவல்கள் 7500க்கும் மேற்பட்ட பட விளக்கங்கள் ஆகியன இடம்பெற்றுள்ளன. ஆங்கில என்சைக்ளோப்பீடியாவிற்கு நிகரான அச்சு அமைப்பு, செய்திக்கருத்துக்கள், படங்கள், கட்டுரைகள், தொகுப்புமுறை அனைத்திலும் பிரிட்டிஷ் என்சைக்ளோப்பீடியாவிற்கு நிகராகத் தமிழ்க் கலைக்களஞ்சியம் அமைந்திருக்கிறது. இதற்கு மூலகாரணம் பெ.தூரனின் தொண்டு மனப்பான்மையும் உழைப்பும் ஆகும். கலைக்களஞ்சியத்தின் பத்துத் தொகுதிகளிலும் இலக்கியம், உயிரியல், புவியியல், தத்துவம், சமயம், அரசியல், வரலாறு, கலைகள், தொழில்நுட்பம், மருத்துவம், கணிதம் போன்ற அனைத்துத்

தகவல்களும், அகரவரிசையில் தெளிவாக, மிகநுட்பமாக இடம்பெற்றுள்ளன. இப்பணியுடன் பெ.தூரன் அவர்கள் குழந்தைகளுக்கான கலைக்களஞ்சியத்தையும் பத்துத் தொகுதிகளாக வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**முடிவுகள்**

மனித இனத்தின் மொழி, கலை, மருத்துவம், அறிவியல் போன்ற அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும்; இப்பதிவுகள்தான் அடுத்துவரும் சமூகத்திற்கு உதவுவதோடு அவனது வாழ்க்கையை உயர்த்தும். வாழ்வியல், பண்பாடுகள், மரபுகள், கலை, மொழி, மருத்துவம், அறிவியல் பதிவு செய்யப்படவில்லையென்றால் மனித சமூகத்தின் ஒட்டுமொத்த அடையாளங்களும் அழிக்கப்பட்டுவிடும். இதன் உன்னத நிலையைப் புரிந்து கொண்டதால்தான் உலகநாடுகள் கலைக்களஞ்சியம் தயாரிப்பதில் அதிகக் கவனம் செலுத்துகின்றன.

ஆனால் இந்தியா அவ்வளவு கவனம் செலுத்துகிறதா? என்று தெரியவில்லை. தமிழில் இப்பணி பெரியசாமித்தூரனோடு நின்றுவிட்டது என்று கூறலாம். இந்திய அரசும், தமிழக அரசும் இதன் உன்னதத்தைப் புரிந்துகொண்டு செயல்படவேண்டும். அப்போதுதான் இந்தியன், தமிழன் அடையாளங்கள் நிலைத்து நிற்கும்.

**குறிப்புகள்**

1. கலைக்களஞ்சியம், தொகுதி மூன்று, ப.347.
2. சாலை.இளந்திரையன், புதுத்தமிழ் முதல்வர்கள், ப.93.
3. ந.சஞ்சீவி, (ப.ஆ.), இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும், ப.368.
4. கலைக்களஞ்சியம், தொகுதி மூன்று, ப.347.
5. மேலது.
6. மேலது.
7. மேலது.
8. மேலது, ப.348.
9. மேலது.
10. Encyclopedia Americanna Preface, p.111.
11. கலைக்களஞ்சியம், தொகுதி மூன்று, ப.348.
12. மேலது.
13. மேலது, ப.349.
14. மேலது.
15. மேலது.

# 4000 தமிழ்த் திருமணங்கள்

தமிழ் மொழியில் நடத்திவைத்த திருமணங்கள் மட்டும் நான்காயிரத்தைத் தாண்டும்..!

தலைவர்கள் மற்றும் தமிழ்ப் புலவர்களின் வரலாறுகள், வரலாற்று நூல்கள் என எழுதியவை 350-க்கும் மேற்பட்ட நூல்கள்.

வாழ்நாள் சாதனையாளர் விருது, பேரவைச் செம்மல் விருது, திரு.வி.க. விருது.. இப்படியாகத் தமிழுக்கு இவர் ஆற்றிய தொண்டுக்காகப் பெற்ற விருதுகள் மட்டும் நூற்றுக்கு மேல்..!

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே வாழவந்தாள்புரம் கிராமத்தில், ராமு – வாழவந்தாள் தம்பதியின் மகனாகப் பிறந்து, தற்போது திருச்சி அல்லூரில், திருவள்ளுவர் தவச்சாலையை நிறுவி, 82 அகவையைக் கடந்தும், இளைஞரைப் போல இரா. இளங்குமரன் ஆற்றிவரும் சேவைகள் வியப்பை அளிப்பவை.

இராமநாதபுரம் தமிழ்ச்சங்கம் நடத்திய விழா ஒன்றில், தமிழ்ப்புலவர் மு.ராகவயங்காரைப் பற்றி உரையாற்ற வந்திருந்த இளங்காலைப் பொழுதினில் அவரை நாம் சந்தித்தோம்.

''பள்ளிக்கூடமே இல்லாத எனது சொந்த ஊரான வாழவந்தாள்புரத்தில், நானே ஒரு பள்ளியை உருவாக்கி ஆசிரியராக இருந்தேன்.

1951-ல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்புலவர் படிப்பை முடித்தேன். கரிவலம்வந்தநல்லூர் அரசுப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தேன். திருக்குறள் வகுப்புகளைத் தமிழகம் முழுவதும் பல்வேறு ஊர்களில் நடத்தி, அதன் முக்கியத்துவத்தைப் பள்ளி மாணவர்களுக்கு விளக்கி வருகிறேன்.

நான் எழுதிய திருக்குறள் கட்டுரைகள் 10 தொகுதிகளை, 1963-ல் காந்தி கிராமத்தில் ஜவஹர்லால் நேரு வெளியிட்டார்.

திருக்குறளுக்காக மட்டும் 60 நூல்களை எழுதி உள்ளேன்.

இதுவரை சுமார் 4000-க்கும் மேற்பட்ட திருமணங்களை, தமிழில் நடத்தி வைத்துள்ளேன். அத்தனையையும் திருக்குறளைச்

சொல்லியே நடத்தினேன். புதுமனை புகுவிழா, பூப்புனித நீராட்டு விழா, காதணி விழா, மணிவிழா, பெயர் சூட்டுவிழா மற்றும் இறுதிச் சடங்குகள் செய்வது உள்பட அனைத்தையும் தூய தமிழிலேயே செய்கிறேன்.

தமிழில் எப்படி விழாக்களை நடத்துவது? என்று அனைவரும் தெரிந்துகொள்ளும் வகையில், தமிழ்நெறிக் கரணங்கள் என்ற நூலை எழுதி உள்ளேன்.

தன்னம்பிக்கை, சுயமுன்னேற்றம், அறிவுரைகள் இப்படியாக, நல்ல மாணவர்கள் உருவாவதற்காகப் பல நூல்களும், தேவநேயப் பாவாணர், சோமசுந்தர பாரதியார், மறைமலை அடிகள் உள்ளிட்ட பல புலவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் உள்பட, பல்வேறு தலைப்புகளில் இதுவரை மொத்தம் 390 நூல்கள் எழுதியுள்ளேன்.

எனது 75-ஆவது நிறைவு விழா, நூல் வெளியீட்டு விழாவாக நடைபெற்றது. அந்நாளில் மட்டும் 81 நூல்கள் வெளியிடப்பட்டன. அன்று எனது அனுபவத்தைச் சொல்லும் விதமாக ஒரு புல் என்ற நூலையும் வெளியிட்டனர்.

இப்பாடல் அரங்கேற்றம் மதுரை ஆயிரங்கால் மண்டபத்தில் நடந்தது. எனது ஓய்வூதியத் தொகை மூலம், திருச்சி காவிரிக்கரையில் உள்ள அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலை நிறுவி உள்ளேன்.

அதில் மனதை நல்வழிப்படுத்த மனவள நிலையம், இயற்கையை மனிதன் பாழாக்காதிருக்க யோசனை கூறும் இயற்கை நல நிலையம், வெளிநாட்டினர் உள்பட யார் வேண்டுமானாலும் வந்து தங்கி ஆராய்ச்சி செய்யும் வகையில் அறிவரகம், சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட கலைக்காட்சியகம், இலவச உணவகம் இவை அனைத்தையும், எனது சொந்த செலவில் நிறுவி செயல்படுத்தி வருகிறேன்.

வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கங்கள் கூட்டமைப்பு சார்பில் (பெட்னா) வாழ்நாள் சாதனையாளர் விருது, மதுரை பல்கலைக்கழகப் பேரவை சார்பில் செம்மல் விருது, பாரதிதாசன் பல்கலைக்கழகம் மதிப்புறு முதுமுனைவர் விருதை வழங்கியுள்ளது.

தமிழக அரசு நல்லாசிரியர் விருதும், திரு.வி.க. விருதும் வழங்கி கௌரவித்துள்ளது" என ஒரே மூச்சில் சொல்லிமுடித்தார் இளங்குமரன்.

**நன்றி ... தினமணிக்கதிர் ..... 15.11.2009**

# தேச வளர்ச்சி : நமது உயர்ந்த கடமை

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,

இந்தப் புனிதமான ஆகஸ்ட் 15-ஆம் தேதி உங்கள் முன் உரையாற்றுவதற்கு எனக்கு மீண்டும் கிடைத்துள்ள இந்த வாய்ப்பை அதிர்ஷ்டமாகக் கருதுகிறேன். இந்த மகிழ்ச்சியான தருணத்தில் உங்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நாளில் நாட்டின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்காகத் தங்களது இன்னுயிரை ஈந்த தியாகிகளை நாம் நினைவுகூர்கிறோம். நமது நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதற்கு நாம் தொடர்ந்து செயல்படவேண்டும் என்று உறுதி ஏற்றுக் கொள்வது தான் இன்று நாம் அவர்களுக்குச் செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும். இந்தியாவை இன்னும் அதிகமான உயரத்திற்குக் கொண்டு செல்வதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள நாம் அனைவரும் இன்று உறுதியேற்றுக் கொள்வோம்.

**கல்வி மூலம் மக்களுக்கு அதிகாரமளித்தல்**

சிறந்த கல்வி அளிப்பது நமது விருப்பம் மட்டுமன்றி, மக்களை அதிகாரம் பெற்றவர்களாக மாற்றுவதற்கும் அவசியம் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். சமீபத்தில் நாங்கள் கல்வி உரிமைச் சட்டத்தை உருவாக்கியுள்ளோம். இந்தச் சட்டம் நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ஆரம்பக் கல்வி அளிக்கும் உரிமையை வழங்கியுள்ளது. கல்வியைப் பொறுத்தவரை அதற்கு நிதி ஒரு தடையாக இருக்காது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளின் தேவைகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

கடந்த சில ஆண்டுகளாக நாம் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக இன்று நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ஆரம்பக் கல்வி கிடைத்து வருகிறது. அவர்களுக்குப் பள்ளிக்கல்வி கிடைப்பதற்கு நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. பள்ளிக்கல்வியின்

பயன்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் அதனை விரிவுபடுத்துவதற்குத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் கல்வி பயில ஆதரவு அளிக்கும் வகையில் வங்கிக் கடன்கள் மற்றும் கல்வி ஊக்கத் தொகை கிடைக்கச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**பொது வாழ்க்கையில் வெளிப்படை மற்றும் நம்பகத்தன்மை**

நமது திட்டங்களும் கொள்கைகளும் என்னதான் சிறந்தவைகளாக இருந்தாலும், அரசு இயந்திரம் ஊழலற்று இயங்காத வரை, திட்டத்தின் பலன்கள் மக்களைச் சென்றடையாது. நமது பொது நிர்வாகத்தை மேலும் செம்மைப்படுத்த விரும்புகிறேன். அப்போதுதான் மக்கள் நலத்திட்டங்களைச் சிறப்பாகவும், விரைவாகவும் செயல்படுத்தப்படும்.

நமது குடிமக்களுக்கு அடிப்படை சேவைகளை வழங்குவதற்கான விநியோக அமைப்புகளை மேம்படுத்துவது அவசியம். நிர்வாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது விரைவான நடவடிக்கை எடுத்து, நிர்வாகத்தை வலுப்படுத்தவிருக்கிறோம். பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் வாயிலாகப் பொது நிர்வாகத்தைப் பரவலாக்கும் முயற்சிக்குப் புத்துயிர் அளிக்கப்படும்.

குடிமைசமுதாயத்திற்கும் அரசுக்கும் இடையிலான புதிய கூட்டுறவுக்கு முன்முயற்சி எடுக்கப்படும். இதன் மூலம் வரி செலுத்துவோரின் பணம் முறையாகச் செலவிடப்படும். பொது வாழ்க்கையில் பொறுப்புணர்வையும் வெளிப்படைத்தன்மையும் அதிகரிக்க தகவல் பெறும் உரிமைச் சட்டத்தை இயற்றியுள்ளோம். இந்தச் சட்டம் மேலும் மேம்படுத்தப்பட்டு சீரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும்.

**ஆகஸ்ட் 15, 2009 சுதந்திர தினத்தன்று**
**பிரதமர் ஆற்றிய உரையில் இருந்து சில பகுதிகள்**

# குற்றுயிர் மடக்கு

திரு. ஆறுவிரல் ஐம்பொறி

தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகைப்படும். இவற்றுள் அணி இலக்கணம் கூறும் நூல்களுள் தண்டியலங்காரம் ஒன்றாகும். இந்நூலில் மடக்கு என்னும் அலங்காரம் உள்ளது. ஒரு செய்யுளில் வந்த எழுத்தோ அல்லது வந்த சொல்லோ மீண்டும் வந்து வேறு பொருள் தருவதை மடக்கு என்று அந்நூல் மொழிகிறது.

எழுத்தின் கூட்டம் இடைபிறி தின்றியும்
பெயர்த்தும்வேறு பொருடரின் மடக்கெனும் பெயர்த்தே

-தண்டி - 92.

இம்மடக்கைத் தண்டியலங்காரம் 315 வகைகளாகப் பிரித்து விளம்புகிறது. அவை, இவண் விரிக்கிற் பெருகும். அவற்றுள் ஓரெழுத்து மடக்கு என்பது ஒரு வகையாகும்.

ஓரெழுத்து மடக்கனு முரித்தென மொழிப - தண்டி - 97.

இவ்வோரெழுத்து மடக்கு குற்றெழுத்தானும் வரும்; நெட்டெழுத்தானும் வரும். வந்த உயிர் நெடிலே வருவதை நெட்டுயிர் மடக்கு என்றும் வந்த உயிர்க் குறிலே வருவதைக் குற்றுயிர் மடக்கு என்றும் தண்டியலங்காரம் நவில்கிறது. கீழ்க்காணும் செய்யுளை ஆழ்ந்து நோக்குக.

அமல லகல மகல லபய
கமல பவன மவள
வமல மடர வளக வதன மடர மதன

இச்செய்யுளை, குற்றுயிர் மடக்குக்கு எடுத்துக்காட்டாகத் தண்டியலங்காரம் தந்துள்ளது. இது கலித்தாழிசை வகையைச் சார்ந்த ஒரு செய்யுளாகும். இச்செய்யுளில் எல்லாவிடத்திலும் அகரக்குற்றுயிரே

வந்தமை காண்க. எனவே இச்செய்யுள் முதலடி : அமல் + அல் + அகலம் + அகல் + அல் + அபய. அமல் - சேருதல். அல்-ஒழிதல். அகலம்-மார்பு. அகல்-நீங்குதல். அல்-இரவு. அபய - சோழ. சோழனே! எங்கள் மார்பினை நீங்கி இரவின் கண் சேராதொழிவாயாக.

இரண்டாம் அடி : கமல + பவன + அவள. கமல - தாமரை. பவனம்-வீடு. அவள - தேவி. தாமரையை இடமாக (வீடாக)க் கொண்ட தேவி. இரண்டாமடியில் இறுதியில் உள்ள அவள என்ற சொல்லும் மூன்றாம் அடியின் தொடக்கத்தில் உள்ள அமலம் என்ற சொல்லும் புணர்ந்து வகர உடம்படு மெய்யைப் பெற்று அவள வமலம் என்றானது.

மூன்றாம் அடி : அமலம் + அடர + அளக + வதனம் + அடர் + அல் +மதன. அமலம் - குற்றமற்ற. (மலம்-குற்றம்) அடர-செறிந்த. அளகம்-குழல். அடர என்ற சொல்லும் அளகம் என்ற சொல்லும் புணர்ந்து வகர உடம்படு மெய்யைப் பெற்று அடர வளகம் என்றானது. வதனம்-முகம் அடர-ஒப்பாக. (அடர்தல்-ஒப்பதால்) அல்-ஒழிதல். அடரல் என்பது அடர எனக் குறைந்து நின்றது. மதன - காமன். குற்றமற்ற செறிந்த குழலினையுடைய முகத்தை அழிவு செய்யா தொழிவாயாகக் காமனை ஒத்தாய்.

அற்புதமான இச்செய்யுளில் உள்ள நுட்பத்தையும் குற்றுயிர் மடக்கணியையும் இயற்றருமையினையும் சொல் நயத்தையும் பொருள் நயத்தையும் எண்ணி எண்ணி இன்புறலாம். அதனால்தான் மிகத் தொன்மையான தமிழ்மொழி இன்றளவும் நிலைத்த புகழ் பெற்றுள்ளது. வருங்காலம் முழுவதும் புகழ் பெறும் என்பதும் அங்கை நெல்லி.

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம்

54, தமிழ்ச் சங்கச் சாலை

மதுரை - 625 001

தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.

செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1

தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/56 December 2009

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலை மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் தி விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படு

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ள**

| | | |
|---|---|---|
| இரா. அழகுமலை<br>செயலாளர்<br>மதுரைத் தமிழ்ச் சங்கம் | முனைவர் க. சின்னப்பா<br>முதல்வர்<br>செந்தமிழ்க் கல்லூரி | இரா. குருச<br>செயலாளர்<br>செந்தமிழ்க் கல்லூ |

| | |
|---|---|
| அனுப்புநர்,<br>**செயலாளர்**<br>மதுரைத் தமிழ்ச் சங்கம்<br>மதுரை – 625 001 | *From*<br>**SECRETARY**<br>Madurai Tamilsangam<br>Madurai - 625 001<br>TAMILNADU, S. INDIA |

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A.,